விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 23 வெள்ளிக்கிழமை (08.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# லலித், அனுஷவுக்கு

# 3வருட கடூழிய சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்தது

(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மூன்று ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.(23-ம் பக்.)



## வலம்புரியை பார்த்தே ஆளுந்தரப்பினர் பேசுகின்றனர்

### சீற்றம் கொண்டார் தவராசா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வலம்புரி பத்திரிகையில் வருபவற்றை பார்த்து சபையில் பேசுவதாக எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா சபையில் சீற்றம் கொண்டார்.

எனினும் அவரது சீற்றத்திற்கு எந்த உறுப்பினர்களும் ஆதரவு தெரிவிக்காததனை அடுத்து அந்த விடயத்தை அப்படியே கைவிட்டார்.

வடக்கு மாகாண சபையின் 105ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலக கட்டடத்தில் நடைபெற்றது.

இதன்போது கடந்த அமர்வுக்கு முன்னைய அமர்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் எதிர் 23

## மேன்முறையீடு செய்வோம் என மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்டவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, பிரசாரங்களுக்காக 23

## புங்குடுதீவில் தாக்குதல் மூவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பகுதியில் 15 பேர் கொண்ட குழு மூவரை தாக்கியதில் அவ்மூவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலை 02

## வயோதிபத் தம்பதி மீது தாக்குதல்

### பணம், நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நான்கு பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்று வயோதிபத் தம்பதியினரை தாக்கிவிட்டு அவர்களிடமிருந்து 23

## அரசியல் யாப்பின் 20ஆவது திருத்தம் வடக்கு மாகாண சபையில் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கும் 20 ஆவது திருத்த சட்டத்தை வடக்கு மாகாண சபை நிராகரித்துள்ளது. அதேநேரம் 20 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டால் அதனை அந்த நேரத்தில் பரிசீலிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 105 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

அரசாங்கத்தால் புதிதாக கொண்டு வரப்பட்டிருக்கும் 20 ஆவது திருத்தம் தொடர்பில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போது 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் விவாதிக்கப்பட்டு கடுமையான எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இத்திருத்தத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பில் நேற்றைய தினம் முடிவெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே 02

## குண்டு வெடிப்பு; 4 படையினர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை - மொரவெவயில் அமைந்துள்ள இலங்கை விமானப்படை பயிற்சி 24

## பொலிஸார் மீது வாள்வெட்டு; சந்தேக நபர்கள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 14 பேரையும் நேற்றைய தினம் 23

## கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்க வேண்டும்

### சிவாஜியின் தீர்மானம்; ஏகமனதாக நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்களை தரம் III அதிபர் தரத்தில் நிரந்தரமாக உள்வாங்குமாறு மத்திய கல்வி அமைச்சரை கோரும் பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 105 ஆவது அமர்வு நேற்றைய 23

## 500 கிலோ கிபிர் குண்டு பளையில் வெடிக்க வைப்பு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வேம்போடுகேணி கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட இந்திராபுரம் குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் 500 கிலோக் கிராம் நிறையுடைய கிபிர்க்குண்டு கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

நேற்றையதினம் காலை முதல் பளைப் பொலிஸாரால் குறித்த இந்திராபுரம் பகுதியில் இருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் சுற்றளவில் உள்ள கிராம மக்களை வெளியே மாறும் மாலை நான்கு மணிக்கு பாரிய குண்டு வெடிக்கப்பட உள்ளதாகவும் ஒலிபெருக்கி 23

## யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நல்லூர் தந்த வருமானம் ரூ. 2 கோடி 5 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

2017-ம் ஆண்டு நல்லூர் உற்சவத்தின் போது கடைகள்; விளம்பர பதாகை, சித்த மருந்து விற்பனை, சஞ்சிகை விற்பனை, சேதன பசளை விற்பனை மற்றும் நன்கொடை மூலம் மாநகரசபைக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வருமானம் VAT, NBT உட்பட 2கோடி 5 இலட்சத்து 90 ஆயிரத்து 880 ரூபாய் 94 சதம் ஆகும்.

உற்சவத்தின் போது; வழங்கு பொருட்கள், பயன்பாட்டுச் சேவைகளிற்கான கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு உட்பட 23

## மகிந்த உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சி பிரதமர் ரணிலுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் சிலருக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் நேற்று விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபை தேர்தல் பிற்போடப்படுவது தொடர்பாக விசேட கவனம் 02



## புங்குடுதீவில்...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உறவினர் ஒருவரின் மரணச்சடங்கிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியிலேயே குறித்த மூவரும் தாக்கப்பட்டனர்.

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரஜீவன் (வயது 18) ராகேஸ்வரன் (வயது 25) ராஜ்குமார் (வயது 46) என்பவர்களே தாக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மு-30)

## அரசியல் யாப்பின்...

இந்த விடயம் நேற்றைய தினம் சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டு இத் திருத்தத்தை நிராகரிப்பதாகவும் இத் திருத்தத்தில் திருத்தம் ஏதும் வருமிடத்து அதனை அப்போது பரிசீலிக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த சட்ட மூலத்தை வடக்கு மாகாண சபை நிராகரிக்கவில்லை எனவும் அதேநேரம் ஆதரவு தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ள அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம்,

உச்ச நீதிமன்றத்தில் குறித்த சட்டமூலம் உள்ள நிலையில் அவசரப்பட்டு நிராகரிப்பது அல்லது ஆதரிப்பது என்பது முறையற்றது. எனவே தான் திருத்தங்களுடனான சட்ட மூலத்தை அடுத்து ஆதரிப்பதா? அல்லது எதிர்ப்பதா? என தீர்மானிக்கவுள்ளதாக தெரிவித்தார். இதேவேளை வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் தவராசா, குறித்த சட்ட மூலம் நேற்றைய தினம் வடக்கு மாகாண சபையில் நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவைத்தலைவர் கருத்துரைக்கையில், 20ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரிக்கவில்லை என்றே சபையில் தீர்மானிக்கப்பட்டது எனவும் அதன்படியே தான் ஆளுநருக்கு கடிதம் அனுப்புவேன் எனவும் சபையின் முடிவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கூறினார்.

நேற்று சட்டமூலம் சபையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது தமிழரசு கட்சியின் உறுப்பினர்களில் பெருமளவானோர் சபையில் இருந்திருக்கவில்லை. தமிழரசு கட்சி உறுப்பினர்களே குறித்த சட்ட மூலம் நிராகரிக்கப்படுவதற்கு மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் குறித்த சட்டமூலம் நிராகரிக்கப்பட கூடாது என தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அறிவுறுத்தல் வழங்கியதாகவும் அதன் பின்னரே குறித்த சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் வடக்கு மாகாண சபையில் உள்ள தமிழரசு கட்சி உறுப்பினர்கள் பின் நிற்பதாகவும் வலம்புரி அறிகின்றது. இதேவேளை குறித்த சட்டமூலம் மாகாண சபைகளின் அதிகாரத்தை பறிக்கின்றது என கூறி சிங்களவர்களை கொண்ட மாகாண சபைகள் கூட நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

## மகிந்த உள்ளிட்ட...

செலுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கூறியுள்ளார்.

அரசாங்க அதிகாரிகள் தேர்தலில் ஈடுபடும் போது உள்ள புதிய சட்டதிட்டங்கள் குறித்து இதன்போது கவனத்திற்கொள்ளப்பட்டதாகவும் அதனைத் தவிர, தற்போதைய பொருளாதார வேலைத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறிததும் இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ குணவர்தன மேலும கூறியுள்ளார். (மு-11)


**Maths Personal Class**

**Grade-9, 10, 11**

**0763757299**

(481)

**ஏல விற்பனை**

யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் (யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலம்) பாவித்த பொருட்கள் பாடசாலை மண்டபத்தில் 20.09.2017 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஏலவிற்பனை. கணினித் திரை-02, லேசர் பிறிண்டர்-01, CPU-05

-அதிபர் (சி-9559)

**சங்கானையில் வைத்தியசேவை**

■ தாதிப்பயிற்சி பெற்றவர்களால் உங்கள் வீட்டிற்கு வந்து நோயாளர்களை பராமரிக்கும் சேவை.

■ வயோதிபர்கள் தங்குமிடவசதி

**சம்பந்தர் மொடேர்ன் கெல்த் கெயர்**

(நாகநாதர் வைத்திய நிலையம் அருகே)

0778730129

(480)

**விஸ்டம்**

**தொழில் நுட்பக் கல்லூரி**

விஸ்டம் இல475, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (வண்ணார் பண்ணை, சிவன்கோவிலடி)

A/L 2017 இல் பரீட்சை எழுதிய தொழில் நுட்ப பிரிவு மாணவர்களுக்கான செய்முறை பயிற்சி வகுப்புக்கள்

பொறியியல் தொழில்நுட்பம்

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

ஆரம்பம் 10.09.2017 பி.ப 2.00 மணி

077 2487774

அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.

A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

(சி-9574)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் இன்று 08.09.2017 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் 43ஆவது பட்டமளிப்பு விழாவில் MSC in management பட்டத்தினை பெறும்

**செல்வி தருமலிங்கம் கார்த்திகா**

(B.B.M, P.G.D in marketing)

அவர்கள் மேன் மேலும் சிறப்புக்கள் பல பெற்று நலமாக வாழ சந்நிதியான் பாதம் பணிந்து உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- அம்மா, அப்பா, பெரியப்பா, பெரியம்மா, சகோதரர்கள்

நெல்லியடி முருகன் வீதி, மீசாலை.

(சி-9586)


# மரண அறிவித்தல்கள்

## தைலான் காமராஜ்



பதுளையை பிறப்பிடமாகவும் இல.26, கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவரும் காமராஜ் என்று அழைக்கப்படும் தைலான் காமராஜ் அவர்கள் 06.09.2017 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஐங்கையன் சுவையூற்று இரணைமடுச் சந்தி (உரிமையாளர்), அபயாம்பிகா சமேத முருகண்டீஸ்வரர் ஆலய ஸ்தாபகரும், தர்மகர்த்தாவும், தலைவரும் சிறந்த ஆன்மிக சேவகரும், சமூகத் தொண்டரும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற தைலான்-சந்திரா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஸ்ரீபதிநாதன் இராஜேஸ்வரி ஆகியோரின் மூத்த மருமகனும், சுகந்தியின் அன்புக் கணவரும், சஞ்சீவன், சாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், குழந்தைவேல், சறோஜா, கணேசன், இரத்தினகுமார், கோகுலாம்பாள், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபிநாத், சுஜீபா, கணேஸ், ஞானஜோதி, இந்திராணி, ரேவதி, சந்திரலேகா மற்றும் காலஞ்சென்ற முருகன், கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.09.2017 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக கனகாம்பிக்கைக்குள பொது நோக்கு மண்டபத்திலும் பின்னர் திருமுருகண்டி வர்த்தகநிலைய பொது மைதானத்தில் வைக்கப்பட்டு பாரதிபுர இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இல.26, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி. 0750410607 தகவல்: குடும்பத்தினர். (475)

## வீரகத்தி குமாரசாமி

(ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா ரெலிக்கொம் உத்தியோகத்தர்)

பிறப்பு 11 - 04 - 1944



இறப்பு 07 - 09 - 2017

வரணி வடக்கு வரணியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கு கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி குமாரசாமி (ஓய்வு பெற்ற ஸ்ரீலங்கா ரெலிக்கொம் உத்தியோகத்தர்) அவர்கள் 07.09.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், தீபராஜ் (ப.நோ.கூ.சங்கம்-நெல்லியடி), சர்மிளா, துஷியந்தன் (RDA கிளிநொச்சி), பிரவிதா, மயூரன், அரவிந்தன் (ஆசிரியர்-முல்லை மாங்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காண்டீபன், சிவகுமார், சாந்தினி, வினோதினி ஆகியோரின் மாமனாரும், பேபிகா, நிருஷனா, விதுசனா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரி, வள்ளிநாயகி, மகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (483) தகவல்:- குடும்பத்தினர்

# கண்ணீருடன் கூடிய


# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



## சண்முகநாதன் அருள்நங்கையின் அருமைப் புத்திரன்

# ச.சந்துதன்

## (சந்துக்குட்டி)



**சிரித்த நாள்:- 07.02.2000**
**அழுத நாள்:- 08.09.2009**

பார் எல்லாம் போற்ற இந்த பாரினிலே நீண்ட நாள் நீ வாழ்வாய் என்ற எம் நினைவைக் கனவாக்கி எட்டு வருடங்கள் இருள் சூழ்ந்த இவ்வுலகில் எம்மை விட்டு ஒளியாகி மறைந்த எம் அன்புச் செல்வமே சந்துதா. நீ இருந்த வேளை நாம் பெற்ற இன்பத்திற்கு நிகரில்லை ராசா நீ இல்லாத இந்த நாட்கள் துன்பத்தின் நாட்களடா. அன்பான எங்கள் செல்வமே உன் அழகான வதனத்தை எப்போ தான் காண்போமோ, அருமை மகனே உமை பிரிந்து வாழும் வாழ்க்கை நரகமாய் இருக்கிறது. நீ சென்ற நாள் முதலாய் உன் வரவை எதிர் நோக்கி இருக்கின்றோம். நீ என்றாவது வருவாய் என்ற நம்பிக்கையில் நீ துயிலும் புனித இல்லத்தில் காத்திருக்கும் உன் தந்தையின் நிலையை எண்ணிப்பார் ராசா. பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி என்பது படிப்பதற்கு உண்மை என்றாலும் அதை ஜீரணிக்க எமக்கு சக்தி இல்லை அருமைமகனே. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதில் என்றாலும் எமக்கு வருவாய் என்ற குருட்டு நம்பிக்கையில் வாழ்கின்றோம் உன் அன்பான நினைவுகளுடன் என்று அறிய மாட்டாயா. கட்டிளம் காளையாக வளர்ந்து நீ நிற்கும் காட்சி மனக் கண்ணில் ஓடுதடா. மீண்டும் நீ எப்ப எங்களுடன் கூடி வாழ வருவாய் என்று ஏங்குதடா எங்கள் உள்ளம். அண்ணா லண்டனில் இருக்கிறான் என்று உன் சகோதரர்கள் நம்பி இருக்குதடா. அண்ணாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும் நம்பியக்கு என்ன பதில் எனிக் கூற என்று நீ தான்டா சொல்லவேணும். மாறாது மாறாது உன்நினைவு மாறாது, தேறாது தேறாது எங்கள் உள்ளம் தேறாது. அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வெளியிலே சிரிக்கின்றோம் அது சிரிப்பல்ல
துன்பத்தின் சிதறலடா கண்ணே.
உனை வந்து சேரும்
வரை துன்பக் கடலிலே
தத்தளித்து நிற்கும்.



(கி-9556)

'லக்ஸ்மி'
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

உன் பெற்றார்கள்,
சகோதரர்கள்,
உற்றவர்கள்.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications are invited by me up to 29th September, 2017 from suitably qualified persons for the following posts.

**1. PROJECT MANAGER – CONSTRUCTION WORKS (University of Jaffna)**
**Qualifications**

(a) Should posses a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Civil Engineering
or
Should posses a B.Sc Engineering degree from a recognized university/HEI specializing in Quantity Surveying
or
Equivalent professional qualifications recognized by the Institution of Engineers, Sri Lanka (IESL)
**AND**
(b) Possess a corporate membership from a recognized Institute of Engineering Institute.
or
Posses a corporate membership from a recognized Institute of Quantity Surveying
**AND**
(c) A minimum of 10 years of relevant experience in construction projects, handling contracts as well as managing direct labour.

**Salary Scale : U-EX2(II):** Rs.46,131- 8X 883; 8X1,082 – 61,851pm as at 01.01.2017
(Rs.64,710- 8X 1,240; 8X1,520-86,790pm as at 01.01.2020)

**Selection:** By Structured Interview.

**2. CHIEF MARSHAL (University of Jaffna)**

**Qualifications :**
(1) (a) Should possess a degree from a recognized university/HEI and an officer not below the rank of Assistant Superintendent of Police or an Officer in equivalent rank in the other Armed Services of Sri Lanka.
or
(b) A holder of the post of Deputy Chief Marshal in the Marshal service and confirmed in that post with not less than five (05) years of satisfactory service in that grade.

(2 ) Physique –
Height - 5' 5"
Chest - 32" deflated

Note : Preference will be given to those with actively participated in Sports activities, Social Welfare Activities and Recreation programmes within the university and at National Level.

**Salary Scale:** U_EX 2(II)
- Rs. 46,131-8X883;8X1082-61,851/- p.m. as at 01.01.2017
- (Rs.64,710-8X1,240;8X1,520-86,790/-p.m. as at 01.01.2020)

**Selection:** By Structured Interview

**3. CHIEF SECURITY OFFICER, GRADE II (University of Jaffna)**

**Qualifications :**
i. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the Other Armed Services
**OR**
ii. A person who possesses a degree from a recognized University/Higher Educational Institutions with not less than five (05) years experience in security work.
**OR**
iii. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years of satisfactory service in those grades.

**Salary Scale:** U_EX 1(II)
- Rs. 35,556-3X801-37,959(EB)38,842-12X883-49,438/- p.m. as at 01.01.2017
- (Rs.49,860-3X1,125-53,235(EB)54,475;12X1,240-69,355/-p.m. as at 01.01.2020)

**Selection:** By Structured Interview

**4. AUDIO VISUAL TECHNICAL OFFICER – GRADE II (University of Jaffna).**

**Qualifications:**

(i) Diploma in Technology of the Open University of Special Engineering apprenticeship Certificate issued from 1989 by the National Apprenticeship Board or National Diploma in Technology or City and Guilds Final Certificate in the field of Electronics or Power, together with one year's experience in relevant video work
or
Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with one(01) years experience in relevant video work.
**OR**
(ii) Pass in 3 subjects at the G.C.E(A/L) Examination in Science one sitting and six(06) years experience in Audio Visual work.

**Salary Scale:** U-MN3(II) - Rs.30,380-18x438-38,264 p.m as at 01.01.2017
- (Rs.42,590-18x615-53,660 p.m as at 01.01.2020)

**Selection:** By Interview

**5. SUB WARDEN (FULL TIME) GRADE II –MALE/ FEMALE (University of Jaffna)**

**Qualifications :**
A graduate of a recognized University. Preference will be given to those with experience in administration and management of hostel.

**Salary Scale** : U-MN 3 (II)
- Rs.30,380-18x438-38,264 p.m as at 01.01.2017
- (Rs.42,590-18x615-53,660 p.m as at 01.01.2020)

**Selection** : By Interview

**6. AUDIT ASSISTANT, GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**
a) Passes in 04 subjects with 02 credits under the old syllabus or 03 subjects with 02 credits under the new syllabus of the G.C.E. (Advanced Level) examination
**and**
Credit passes for English Language/ English Literature and Mathematics/ Commercial Arithmetic at the G.C.E. (Ordinary Level) examination.
**AND**
b) i) Preliminary Level/ /Licentiate I / Foundation Level of Institute of Chartered Accountants in Sri Lanka
or
ii) Foundation Level of Chartered Institute of Management Accountants
or
iii) Any other qualification determined by the Commission as equivalent to above (b) (i) and (ii)
**AND**
c) At least two years experience in Auditing in State or recognized Private Organization.

**Salary Scale:** U-MN2 (II)
- Rs.26,592 -18x335-32,622 p.m as at 01.01.2017
- (Rs.37,275-18x470-45,735 p.m as at 01.01.2020)

**Selection:** By Interview

**7. PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**

**Qualifications:**
Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (IIIA)
- Rs. 22,571 – 7x213; 10x253 -26,592 p.m. as at 01.01.2017
- (Rs. 31,625 – 7x300; 10x355 -37,275 p.m. as at 01.01.2020)

**Selection** : By Interview

**8. NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**
(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.
**AND**
(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA)
- Rs. 22,571 – 7x213; 10x253 -26,592 p.m.as at 01.01.2017
- (Rs. 31,625 – 7x300; 10x355 -37,275 p.m.as at 01.01.2020)

**Selection** : By Interview

**9. DRAUGHTSMAN (LOWER GRADE) (University of Jaffna)**

**Qualifications :**
Qualifications in Draughtsman-ship obtained at a Draughtsman Examination of Government Department or from a recognized institution.
**Salary Scale** : U-MT1 (IIIA) - Rs.22,571-7x213;10x253-26,592 p.m as at 01.01.2017
- (Rs.31,625-7x300;10x355-37,275 p.m as at 01.01.2020)

**Selection** : By Interview

**10. SECURITY INSPECTOR GRADE II (Vavuniya Campus)**

**Qualifications:**
i) a) G.C.E(Ordinary Level) Examination in 06 subjects at not more than 2 sittings with credit passes in 5 subjects. The credit passes must include Sinhala/Tamil language or Literature and Arithmetic/Commercial Arithmetic/Mathematics.
**OR**
b) Employees of the University System with not less than 5 years' satisfactory service and who have passed the G.C.E. (Ordinary Level) Examination in 06 subjects at not more than 03 sittings. The subjects passed must include Sinhala/Tamil language or Literature and Arithmetic/Commercial Arithmetic/Mathematics.
**AND**
ii) Not less than 05 years satisfactory service in the Police or Armed service or Security service in the University System or other recognized security organization.

iii) Should have actively participated in Sports.

iv) Height : Not less than 5 feet and 4 inches.
Chest : Not less than 34 inches (Normal).

**Salary Scale:** U-MN1 (IIIA)
- Rs.21,932-17x213-25, 553 p.m as at 01.01.2017
- Rs.30,725-17x300-35, 825 p.m as at 01.01.2020

**Selection:** By Interview

**11. INSTRUMENT MECHANIC, GRADE III (University of Jaffna)**

**Qualifications:**
i. Pass in six (06) subjects at the G.C.E. (O/L) Examination with Sinhala/ Tamil, Mathematics and Science as subjects at not more than two sittings.

**AND**

ii. (a) Should have completed at least a two (02) year full time course (ie. National Certificate in Technology (NCT) / National Certificate in Engineering Craft Practice (NCECP)) in Electrical/ Electronics Technology at the Government Technical College or equivalent and one (01) year experience in the relevant field.
**OR**
(b) Should have at least three (03) years experience in a recognized Engineering Establishment in Electronics Instrumentation and Computer Technology.

AND

iii. Proficiency in Computer hardware/ software.

**Salary Scale :** U-PL 3(III) Rs.21356-16x192-24428 p.m. as at 01.01.2017
(Rs.29915-16x270-34235 p.m. as at 01.01.2020)

**Selection By :** Trade Test and interview

**12. CARPENTER, GRADE II (University of Jaffna-Kilinochchi Premises/ Vavuniya Campus)**

**Qualifications:**
i. Pass in the 8th standard.
ii. Should be conversant with the
a. Various types of joints and preparation of such joints for work in carpentry used in building and furniture trade;
b. Use of various types of tools, various species of wood and reading of drawings;
c. Reading of scales up to 1/32" accurately.
iii. Not less than 2 years' experience in carpentry.

**Salary Scale : U-PL 3(III)** Rs.21356-16x192-24428 p.m. as at 01.01.2017
Rs.29915-16x270-34235 p.m. as at 01.01.2020)

**Selection By :** Trade Test and interview

**13. MASON, GRADE II (University of Jaffna/ University of Jaffna - Kilinochchi Premises)**

**Qualifications:**
i. Pass in the 8th standard
ii. Should be conversant with –
a. Brick work and the different types of courses used in the construction of wall footings, wall arches, taper pillars, chimneys, sewer chambers etc.;
b. All types of plaster, mixing and laying of reinforced concerted;
c. Reading plans and setting out foundations for simple constructions;
d. Colour washing including use of emulsion paint.
iii. *Not less than 2 years' experience in masonry*

**Salary Scale :** U-PL 3(III) Rs.21356-16x192-24428 p.m. as at 01.01.2017
Rs.29915-16x270-34235 p.m. as at 01.01.2020

**Selection By :** Trade Test and interview

**14. MECHANIC, GRADE II (University of Jaffna - Kilinochchi Premises)**

**Qualifications :**
i. Pass in the 8th Standard
ii. Should be conversant with
a. Reading scales, micrometers and recording fractional dimensions.
b. Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;
**and**
c. Reading and understanding drawings,
iii. Not less than 2 years' experience as a Mechanic or Machine Operators.

**Salary Scale :** U-PL 3(III) Rs.21356-16x192-24428 p.m. as at 01.01.2017
(Rs.29915-16x270-34235 p.m. as at 01.01.2020)

**Selection By:** Trade Test and Interview

**15. BOOK BINDER, GRADE II (University of Jaffna)**

**Qualifications:**
i. (a) Should have passed the 8th Standard and have at least 5 years' experience as a Binder in a recognized institution;

**Salary Scale :** U-PL 3(III) Rs.21356-16x192-24428 p.m. as at 01.01.2017
(Rs.29915-16x270-34235 p.m. as at 01.01.2020)

**Selection By:** Trade Test and Interview

**16. PLUMBER, GRADE II (University of Jaffna)**

**Qualifications:**
i. Pass in the 8th standard.
ii. Should be conversant with
a) Reading scales up to 1/64"and maintenance and current use of tools;
b) Laying C.I and G.I and lead pipes including various joints and their testing;
c) Repair of ball-valves, cisterns etc., and reading and understanding of simple drawings.
iii. Not less than 2 years' experience in plumbing.
**Salary Scale :** U-PL 3(III) Rs.21356-16x192-24428 p.m. as at 01.01.2017
(Rs.29915-16x270-34235 p.m. as at 01.01.2020)
**Selection By:** Trade Test and Interview

**17. ELECTRICIAN, GRADE II (University of Jaffna-Kilinochchi Premises)**

**Qualifications:**
i. Pass in the 8th standard.
ii. Should be conversant with
a) Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instrument and their uses, various types of wiring, joining, testing meters and small transformers;
b) Reading and understanding drawings and diagrams. Reading scales and record fractional dimensions;
c) Care and the use of the tools in the trade.
iii. Not less than 2 years' experience as an electrician in a government department, State Corporation or in a recognized establishment.

**Salary Scale :** U-PL 3(III) Rs.21356-16x192-24428 p.m. as at 01.01.2017
Rs.29915-16x270-34235 p.m. as at 01.01.2020

**Selection By:** Trade Test and Interview

**AGE LIMIT :** Not more than 45 years for all the above posts.
**Note:** Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission. .
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on specified forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non – Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.10/- Stamped envelope of 23X10 cm in size. Only Applications sent on the specified form will be accepted. (Please annex copies of relevant documents). The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Senior Assistant Registrar / Establishments [Non –Academic] of this University on or before 29/09/2017.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. Howeve, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
06/09/2017

(C-9570)


# எனக்கு எதிராக மகிந்த வாக்களிக்கமாட்டார்

## சரத் பொன்சேகா நம்பிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கூட்டு எதிரணியினர் தனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தால், மகிந்த ராஜபக்ஷ நிச்சயமாக அதற்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"அனைத்துலக நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதாக, ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு இணக்கம் தெரிவித்தவர் மகிந்த ராஜபக்ஷ தான்.



நான் அனைத்துலக நீதிமன்றத்தைப் பரிந்துரை செய்யவில்லை. அதற்குக் கீழாக, உள்நாட்டு விசாரணைகள் முன்னெடுக்கபபட வேண்டும் என்றே கூறினேன்.

2 இலட்சத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

இந்தச் சூழலில், எப்படி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எனக்கு எதிராக கை உயர்த்த முடியும்?

எந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

நான் சவால்களை விரும்புகிறேன். சவால்கள் வரும் போது, என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொள்ளலாம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கடத்தல் கப்டன் தசநாயக்கவின் மறியல் நீடிப்பு!

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பீ தசநாயக்கவின் விளக்க மறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

11 தமிழர்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் நடத்தி வரும் விசாரணைகளின் அடிப்படையில் தசநாயக்க கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தசநாயக்க உள்ளிட்ட ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி எதிர்வரும் 25ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டே நீதவான் லங்கா ஜயரட்ன, புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி வரையில் 11 தமிழர்கள் காணாமல் போயிருந்தனர்.

கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் குறித்த தமிழர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் தசநாயக்க நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

உடல் நிலை பாதிப்பினால் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என சட்டத்தரணி ஊடாக அவர் அறிவித்திருந்தார்.

தசநாயக்கவின் உடல் நிலை தொடர்பான மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# எம்.பிக்களுக்கு மாதாந்தம் ஒரு இலட்சம் கொடுப்பனவு

## குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவது தொடர்பிலான குறைநிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் ஒன்றைப் பராமரிப்பது உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய குறைநிரப்பு மதிப்பீட்டு பிரேரணையே இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# "பொன்சேகா ஒரு பைத்தியக்காரன்" வீரவன்ச ஆவேசம்

(கொழும்பு)

அமைச்சர் சரத் பொன்சேகா ஒரு பைத்தியக்காரன் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் ஆவேசத்துடன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில், ஜெனரல் ஜயசூரிய மீது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக தினேஷ் குணவர்த்தன கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதனையடுத்து, நடந்த விவாதத்தில் ஆவேசமாக உரையாற்றிய விமல் வீரவன்ச,

"அமைச்சர் சரத் பொன்சேகா என்ன பைத்தியமா? முன்னாள் இராணுவ ஜெனரல் ஒருவர் போர்க்குற்றங்களை இழைத்தார் என்று அமைச்சர் ஒருவர் குற்றம் சாட்டுவது ஒன்றும் சிறிய விடயமல்ல. அவர் ஒரு பைத்தியக்காரன் என்று ஆவேசமாகக் கூறினார். (இ-7)


# 7ஆம் ஆண்டு நினைவு ஜெப ஆராதனை

ஓய்வு நிலை பிரதி அதிபர் யா/பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை பருத்தித்துறை யா/ஹாட்லிக் கல்லூரி ஓய்வு நிலை கணித ஆசிரியர் ஜே.எஸ்.இராசரத்தினத்தின் அன்பு மனைவி

திருமதி. சிசிலியா குணமணி இராசரத்தினம்



| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1929 – 06 – 18 |  | 2010 – 09 – 10 |

அன்பான தாயே ஜெபத்தோடு வளர்த்தீரே
கருணை உள்ளம் கொண்டவரே பிரம்பின்றி கற்பித்தீரே
என்றும் உள்ளத்தில் வீற்று இருப்பீரே
ஏழு ஆண்டுகள் கடந்தும் உம் நினைவுகள்
எம்மை விட்டு நீங்காது
இறைவனடி வாழ்ந்து எம்மை நினைவுகூருவீர்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எம்பெருமான் யேசு பிரானை பிரார்த்திக்கின்றோம். உங்கள் பெயரால் பெதனி கடற்கரை வீதி பருத்தித்துறையில் உள்ள எங்கள் வீட்டில் 08.09.2017 இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஜெபக் கூட்டத்தில் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகிறோம்.

"பெதனி" 1ஆம் குறுக்குத்தெரு, கடற்கரை வீதி, பருத்தித்துறை (ச-9564) இங்ஙனம், பிள்ளைகள்.


# இராசி பலன்

08.09.2017
(ஆவணி 23, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துதியை முற்பகல் 11.42 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 2.14 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம், உத்தரம் | | ராகு, சுக். |
| கேது | | | சூரி, புத, செவ் |
| | சனி | குரு | |

**மீனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம்.

**இடபம்:** சந்தோசமான வாய்ப்புக்களைச் சந்திக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், நிர்வாகத் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** விரதங்களில் நம்பிக்கை கூடும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**கடகம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உடல் நலன் சீராகும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடன் பிறப்புக்கள் வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும்.

**சிம்மம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், திட்டமிட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள், வரம்தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** ஒளிமயமான எதிர்காலத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பயணங்கள் கைகூடும்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.



# தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டின் சக நிர்மாணிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் நிரந்தர அமைதியைக் கட்டியெழுப்பலாம்

## அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் சுட்டிக்காட்டு

இனப்பிரச்சினைக்கான தீர்வு, இனப்படுகொலைக்கு எதிரான நீதி என தெரிவித்த அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன், தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டின் சக நிர்மாணிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் மாத்திரமே இலங்கை தீவில் அமைதியை கட்டியெழுப்ப முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், உத்தேச அரசியலமைப்பு முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு மற்றும் பிரகடன வெளியீடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு "அரசியல் அமைப்பாக்க அவையில் தமிழர் முன்வைக்க வேண்டியது தமிழ் தேசத்தை தற்காத்துக்கொள்ளும் தீர்வையா? நடைமுறைச்சாத்தியம் எனும் பெயரில் சிங்களம் திணிக்க முயல்வதையா? என்ற தலைப்பில் கருத்துரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

சிங்கள, தமிழ்,முஸ்லிம் மக்கள் ஆகிய மூவினத்தவரும் இந்த தீவின் சக நிர்மாணிகள் என்பதை ஏற்றுக் கொள்வதில் இருந்துதான் யாப்பு மீள வரையப்பட வேண்டும். மூவினத்தவரையும் சகநிர்மாணிகளாக ஏற்றுக் கொள்ளும் போதுதான் பல்லினத்தன்மை மிக்கதாகவும் இறந்த காலத்தில் இருந்து பாடங்களை கற்றுக்கொண்டதாகவும் அமையும்.

தமிழ் பேசும் மக்களை சக நிர்மாணிகளாக ஏற்பது அவர்களை தேசிய இனமாக ஏற்றுக்கொள்வதில் இருந்து தான் தொடங்குகிறது. ஒரு தேசமாக சிந்திப்பது என்பது ஒரு தேசிய இனம் தனது அடிப்படை மூலக்கூறுகளை பாதுகாத்து கொள்வதுதான்.

மன்னர் அதிகாரத்திலிருந்து மக்கள் அதிகாரம் தோற்றம் பெற்ற பொழுது தேசம், தேசியம் போன்ற சொல்லாடல்கள் தோற்றம் பெற்றன. தேசம் என்பது ஒரு பெரிய மக்கள் திரளை குறிக்கும். தேசியம் எனப்படுவது ஒரு பெரும் திரளாக கூடும் மக்கள் கூட்டத்தை குறிக்கும். ஈழத் தமிழரைப் பொறுத்தவரை தேசியம் என்பது அதை ஏற்கனவே இருந்த ஒரு மனோநிலை தேசியமாக சிந்திக்கும் போது நீங்கள் வேறு நாடு, நாங்கள் வேறு நாடு தான் .இதை நாம் பகை நிலையில் சொல்லவில்லை.

ஒரு தேசிய இனத்தின் தேசிய மூலக்கூறுகளை பாதுகாக்கும் நிலைமைகளை அழிப்பது தான் இனப்படுகொலை என்கின்றோம்.

அது வெளிப்படையான இனப்படுகொலையாகவும் இருக்கலாம்.கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையாகவும் இருக்கலாம். ஈழத் தமிழர்கள் ஒரு வெளிப் படையான இனவழிப்பை கடந்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குள் நிற்கிறார்கள். இந்த நூற்றாண்டின் முதலாவது இனப்படுகொலைக்கு உள்ளாகிய மக்கள் நாங்கள்.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது இனப்படுகொலைக்கு எதிரான நீதி தான். அதுவே இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமைய முடியும் ஆனால் இந்த அடிப்படையிலிருந்து விலகித்தான் யாப்பு உருவாக்கம் நடந்து கொண்டு இருக்கிறது. இங்கே யாப்பு உருவாக்கம் முதல் கோணல் ஆகிவிட்டது. இனப்படுகொலைக்கு எதிரான நிதியில் இருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வை பிரித்தெடுத்து விட்டார்கள். அதனை வெறுமனே யாப்பு உருவாக்க முயற்சிகளாக சுருக்கி விட்டார்கள். அந்த அடிப்படையை நாங்களே பிரித்துக் கொடுத்து விட்டோம் .

அதாவது போர்க்குற்ற விசாரணையானது அனைத்துலக விசாரணையில் இருந்து கலப்பு விசாரணையாக இறங்கி இப்பொழுது உள் நாட்டு விசாரணையாக வந்து சில நாட்களுக்கு முன்நமது தளபதிகளில் யாரும் கை வைக்க விடமாட்டோம் என பேசும் நிலைக்கு வந்து விட்டது. இப்படியென்றால் இனப் படுகொலைக்கு எதிரான நீதியையும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் நினைக்க முடியாத ஒரு நிலைமை வந்து விட்டது என்றே கூறலாம்.

இனப்படுகொலைக்கு எதிரான நீதி என்பது என்ன? தமிழ் மக்களை ஒரு தேசமாகச் சிந்திப்பதுக்குரிய அடிப் படை உரிமைகளை பாதுகாப்பது ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் தேசிய மூலக் கூறுகளை பாதுகாப்பது அந்தத் தீர்வு தான். இனப்படுகொலைக்கு எதிரான நீதி நாங்கள் இனிமேலும் கொல்லப்பட மாட்டோம்: காணாமல் ஆக்கப்பட்டமாட்டோம்: காரணமின்றி கைது செய்யப்படமாட்டோம் என தமிழ் மக்கள் நம்பவேண்டும்.ஒரு கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைக்குள் நாங்கள் சிறிது சிறிதாக கொண்டு அழிக்கப்பட மாட்டோம் என தமிழ் மக்கள் நம்பவேண்டும். அப்படி நம்பக்கூடிய ஒரு தீர்வு வரும் பொழுது தான் இந்த தீவின் சக நிர்மாணிகளாக நாம் பலம் அடைய முடியும்.எனவே தமிழ் மக்களுடைய அடிப் படை கூறுகளைப் பாதுகாக்கும் ஒரு தீர்வு வேண்டும் .

அது இனப்படுகொலைக்கு எதிரான நீதியில் இருந்து தான் கிடைக்கும்.ஆனால் அந்த அடிப்படையிலிருந்து தீர்வு முயற்சிகள் பிரிக்கப் பட்டது மட்டுமல்ல அதன் அடுத்த கட்டமாக இப்பொழுது கூறப்படுகிறது இதுதான் யதார்த்தமான தீர்வு இதனை சுதாகரித்துக் கொள்வோம் என. எது யதார்த்தம். யதார்த்தத்துக்கும் கனவுக்கும் இடையே எப்பொழுதும் இடைவெளியிருக்கும். அதுதான் வழமை. கனவை நோக்கி யதார்த்தத்தை வளைப்பதற்கு பெயர் தான் செயற்பாடு. போராட்டம். யதார்த்தத்தை நோக்கி கனவை வளைப்பது தரகு வேலை. ஆகவே எங்களுக்குத் தேவை தலைவர்கள். தரகர்கள் தேவையில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்படுவது வெறுமனே யாப்பு உருவாக்க முயற்சியாகச் சுருக்கப்பட்டு விட்டது.

ஒரு யாப்பை உருவாக்குவதற்கு முதல் சம்பந்தப்பட்ட மக்களுக்கிடையே சமாதான உடன்படிக்கை செய்யப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான சமாதான உடன் படிக்கை எதுவும் செய்யப்படவில்லை. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் இடையிலான வலு சமநிலை தான் நாட்டில் இருந்தது. அந்தச் வலு சமநிலை 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலோடு மாற்றக்கூடிய ஒரு நிலைமை வந்தது. தமிழ் மக்களின் வாக்குப் பலத்துடன் தான் அந்த வலுசமநிலை குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் அடைந்து அதை தெரியப்படுத்தும் வகையில் மூவின மக்களுக்கும் இடையில் முக்கூட்டு உடன்படிக்கை செய்யப் பட்டிருந்தால் இந்த உடன் படிக்கை மீது யாப்பை கட்டி அமைத்திருக்கலாம்.

ஆனால் அவ்வாறான ஒரு உடன்படிக்கை செய்யப் படவில்லை. அவ்வாறான ஒரு பின்னணிக்குள் தான் தமிழர்களுடைய தேசிய மூலக் கூறுகளை நீர்த்துப்போகச் செய்கின்ற யாப்பு உருவாக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் யாப்பு உருவாக்கம் தமிழ் மக்களுடைய தேசிய அடிப்படைகளை பலப்படுத்தும் ஒன்றாகத் தெரியவில்லை. அது வெளிப்படையாக நடக்கவில்லை.இந்த யாப்பு முயற்சிகள் ஒரு கற்பனைக் கதையாகவும் இருக்கலாம்.

எங்களை சக நிர்மாணிகளாக ஏற்றுக்கொள்ளாத யாப்புக்கு வாக்களிப்போமாக இருந்தால் நாங்கள் அதிலிருந்து மீண்டெழுவதற்கு பல காலம் எடுக்கும். நாங்களும் ஏற்றுக்கொண்டு ஒரு புதிய யாப்புக்கு வாக்களிப்போமாக இருந்தால் அதுவே இன்னும் ஒரு பொறியாக மாறும். இதை தடுக்க மக்கள் விழிப்படைய வேண்டும். உங்களை ஒரு தேசமாக உணர வேண்டும். தேசிய மூலக் கூறுகளைப் பலப்படுத்த வேண்டும்.


நாங்கள் சக்திமிக்க மக்கள்.மிகப்பெரிய தமிழகம் எமது அருகில் உள்ளது. நிதி வளம் பொருந் திய புலம் பெயர் எமக்கிருக்கிறது. வலிமை மிக்கவர்கள் நாங்கள். ஆயிரமாக எங்கும் வளர்ந்துள்ளோம். இனப்படுகொலைக்கு பின்னரும் எழுந்திருக்கும் தைரியம் எமக்கு உண்டு. நாங்கள் எழுவோம்.

எங்களுக்கு தேவை எமது பலத்தை ஒருங்கிணைக்கும் தலைவர்கள். தமிழ்த் தேசியத்தை, தமிழ் மக்களை ஒரு தேசமாகவும் ஏற்றுகொள்ளாத இடத்தில் முழு இலங்கை தேசத்தையும் கட்டியெழுப்ப முடியாது. தமிழ், முஸ்லிம் மக்களை தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளாவிட்டால் முழு இலங்கைக்குமான தேசியத்தை கட்டியெழுப்ப முடியாது .

தமிழ் மக்கள் ஒடுக்கப் பட்டிருக்கும் ஒரு நிலையில் சிங்கள மக்கள் நிம்மதியாக இருக்க முடியாது. தமிழ் மக்களின் கூட்டுரிமை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் சிங்கள மக்களும் தமது கூட்டுரிமையை அனுபவிக்க முடியாது. இலங்கை தீவில் அமைதியை கட்டி எழுப்ப வேண்டும் என்றால் தமிழ் மக்களை தேசிய இனமாக ஏற்றுக்கொள் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## நல்லூரிலிருந்து கொக்கட்டிச்சோலை வரை சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் யாத்திரை
### இன்று காலை ஆரம்பம்

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்திருவிழாவை முன்னிட்டு 'இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபை' யாழ். சின்மயாமிஷனின் ஆலோசனைக்கமைய ஏற்பாடு செய்துள்ள நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்திலிருந்து மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் வரையான புனித திருத்தல தரிசன பாதயாத்திரை இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நாளைமறுதினம் 10.09.2017 ஞாயிற்றுக்கிழமை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. (இ-3)




## அலங்கார உற்சவ அபிஷேகம்

ஆதி மயிலிட்டி காசிப்பூதராயப் பெருமானின் அலங்கார உற்சவ அபிஷேகம் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

எதிர்வரும் 03.10.2017 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறவுள்ளது. (இ-3)

## ஓராண்டு நிறைவு நிகழ்வும் வருடாந்த பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தும் நோக்கில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட வயாவிளான் சமூகநல அமைப்பு தனது முதலாம் ஆண்டை நிறைவுசெய்யும் வகையில் வருடாந்த பொதுக் கூட்டத்தை விரிவான முறையில் நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிறு அன்று வயாவிளான் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு வலி-வடக்கு மீள் குடியேற்ற குழுத் தலைவர் சஜீவன் சண்முகலிங்கம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்கிறார்.

அமைப்பின் தலைவர் ம.ஜெகநாதன் தலைமையில் காலை 9 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும். இக்கூட்டத்தில் வயாவிளான் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயற்குழுவின் சார்பில் அதன் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

2017/2018 ஆண்டிற்கான புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதோடு புதிய யாப்பும் பொதுச்சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.

புதிய அங்கத்தவர்கள் உள்வாங்கப்படுவதுடன் ஏற்கனவே உள்ள மீள்குடியேற்றப் பதிவுகள் மீளாய்வும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## ஆசிரியர்களுக்கான தரவட்ட செயற்பாடு

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான தரவட்ட செயற்பாடு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் 1.30 மணிவரை யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.மைத்திலி அறிவித்துள்ளார். (இ-10-136

## சந்நிதியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு யாழ். தேயிலை விற்பனை நிலையத்தினரால் வாடகைக்கு கடை எடுக்கப்பட்டு அதில் விற்பனைக்காக களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டிருந்த தேயிலைப் பக்கெற்றுக்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. விற்பனை முகவர்கள் நேற்று முன்தினம் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை கடையை திறப்பதற்காக வந்து பார்த்த போது கடையின் பின்புறம் உடைக்கப்பட்டு தேயிலைப் பக்கெற்றுக்கள் திருடப்பட்டமை தெரிய வந்தது. இதில் 400 கிராம தேயிலைப்பக் கெற்றுக்கள்- 13, 200 கிராம் தேயிலைப்பக்கெற்றுக்கள்- 60, 100 கிராம் தேயிலைப் பக்கெற்றுக்கள்-14, சீனி-20 கிலோ கிராம் ஆகியன திருடப் பட்டன. இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (இ-3-60)

109

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



யாழ்ப்பாண நீதிமன்றம் தாக்கப்பட்டதை அடுத்து 22.05.2015 அன்று பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன், பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.





மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால்

பொலிஸ்மா அதிபரின் யாழ்ப்பாண விஜயத்தின் விளைவாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர, யாழ். தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர் வி.பாலசூரிய, ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பரிசோதகர் ஆர்.பெரேரா, யாழ். பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஜே.ஏ.விஜயசேகர, யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.ஏ.கே.ஏ.சேனாரட்ண ஆகியோருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டது.

இவை யாழ்ப்பாணத் தில் நடக்க 22.05.2015 அன்று மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிராக கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவடங்களிலும் மலையகத்திலும் எதிர்ப்பு எழுந்தது.

மாவட்டம் என்ற எல்லை கடந்து மாகாணம் என்றளவில் மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்தமை மிக முக்கிய வரலாற்றுப் பதிவெனலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடந்ததோடு அங்குள்ள சில பாடசாலைகள் வித்தியாவுக்காக ஆத்ம இளைப்பாற்றல் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டன. இதேவேளை

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு நகரங்கள் வெறிச்சோடின. பாடசாலைகள் இயங்கவில்லை.

மட்டு. மாவட்டம் எங்கும் பூரண ஹர்த்தால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட மலையகத்தில் ஆர்ப்பாட்டம், பேரணிகள் இடம்பெற்றன.

மலையகத்தில் பகுதி பகுதியாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு மாணவி வித்தியாவுக்கு நீதிகிடைக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

இது இவ்வாறிருக்க 22.05. 2015 அன்று வடக்கு மாகாண சபைக்கூட்டத் தொடர் இடம்பெற்றபோது மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவம் தொடர்பான செய்திகள் ஊடகங்கள் முழுவதையும் ஆக்கிரமித்திருக்க,

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் விடயத்தில் நியாயமான முறையில் விசாரணை இடம்பெற்று நீதி நிலை நாட்டப்படுமென நீதியமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷ தெரிவித்தார்.

22.05.2015 அன்று கொழும்பிலுள்ள தகவல் திணைக்களத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நீதியமைச்சர் மேற்போந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

ஒட்டுமொத்தத்தில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற எந்த வேறுபாடுகளும் இல்லாமல் மாணவி வித்தியாவின் படுகொலைக்கான கண்டனம் நாடு முழுவதிலும் புரையோடியிருந்தமை இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

இதேநேரம் 23.05.2015 அன்று சீதுவைச் சந்தியில் மிகப் பெரியதொரு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராக சீதுவைச் சந்தியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் சிங்களத்தில் எழுதப்பட்ட பதாகைகள் ஏந்தப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உயர்கல்விப் பிரதியமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மாணவி ஒருவரின் கொலைக்கு சிங்கள மண்ணில் நடந்த முதலாவது ஆர்ப்பாட்டம் என சீதுவை ஆர்ப்பாட்டத்திற்கு பெயர் சூட்டமுடியும்.

ஒரு தமிழ் மாணவியின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்து சீதுவையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் உயர்கல்வி பிரதியமைச்சர் கலந்து கொண்டமை தமிழர் தொடர்பில் தென்பகுதி மக்களிடம் ஏற்பட்டு வரும் கருத்தியல் மாற்றம் எனக் கூறுவதில் தவறில்லை.

அதேநேரம் பெண்கள் மீதான வன்முறைகள் வேரறுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் சீதுவையில் நடந்த ஆர்ப்பாட்டம் அமைந்திருந்தது ஒரு புதிய மாற்றத்தின் பரிமாணம் எனலாம்.

அதாவது இன அடிப்படையிலான சிந்தனைகள் ஓரங்கட்டப்பட்டு பெண் என்ற அடிப்படையில் உரிமைக்கான குரல் எழுந்துள்ளமை வித்தியாசமானதென்று கூறுவதில் தவறில்லை.

(திங்கள் வளரும்)

-புருசோத்தமன்-

# தண்டப்பணச்சிட்டை சாரதிக்கு தெரிந்த மொழியில் வழங்க வேண்டும்

## மனிதவுரிமை ஆணைக்குழு வவுனியா போக்குவரத்து பொலிஸ் அதிகாரிக்கு கடிதம்

போக்குவரத்து விதியை மீறியதாக சாரதி ஒருவருக்கு தண்டப்பணம் அறவிடுதல் மற்றும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் போது போக்குவரத்து பொலிஸார் குறித்த சாரதிக்கு தெரிந்த மொழியிலேயே அதனை வழங்க வேண்டும். அவரது மொழி உரிமையை மீற முடியாது என இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் ஆர்.எல்.வசந்தராஜா வினால் வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பொலிஸார் ஒருவரால் தனக்கு புரியாத சிங்கள மொழியில் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையை ஆட்சேபித்தும், தனது மொழி உரிமை மீறப்பட்டதாக தெரிவித்தும் வவுனியா, மன்னார் வீதியைச் சேர்ந்த இளைஞர் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா காரியாலயத்தில் 19.01.2017 அன்று செய்து கொண்ட முறைப்பாடு தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவால் விசாரணை மேற்கொண்ட பின்னர் வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி தெரிந்த பொது மகனுக்கு சிங்கள மொழியில் தண்டப் பணச்சிட்டையையோ அல்லது சிங்கள மொழியிலான தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதோ பிழையான நடைமுறை என்பதுடன், இச்செயற்பாடு பொதுமகன் ஒருவரின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகிய மொழி உரிமையை மீறும் செயலாகும்.

எனவே, எதிர்காலத்தில் அதிகாரிகள் போக்குவரத்து குற்றங்களுக்கு வழங்கும் சிட்டைகளை பொதுமக்களுக்கு விளங்கும் மொழியில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறித்த மொழியிலான சேவையை வழங்குவதற்கு அரச திணைக்களமானது கடப்பாடு கொண்டுள்ளது என்பதையும் இந்த ஆணைக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

எனவே இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை பற்றிய அறிக்கையை அனுப்பி வைக்குமாறும், இவ்விடயமானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்றது எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




# இரண்டு பாலங்களின் வேலைகள் பூர்த்தி; மக்கள் பாவனைக்கு விரைவில் திறக்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சி முரசுமோட்டை- வட்டக்கச்சி பிரதான வீதியில் சேதமடைந்த நிலையில் இரு பாலங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.




கிளிநொச்சி முரசுமோட்டை- வட்டக்கச்சி பிரதான வீதியாகக் காணப்படும் பழைய கண்டி வீதியில் உள்ள இரு பாலங்கள் மிக மோசமாக சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

இதனால் இதனூடாக பயணிக்கும் விவசாயிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் மழைகாலங்களிலும் ஏனைய காலங்களிலும் துன்பங்களை அனுபவித்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த பாலங்களைப் புனரமைத்து தருமாறும் பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்தன.

இதனையடுத்து சேதமடைந்த பாலங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் குறித்த இரு பாலங்களும் புனரமைக்கப்பட்டு அதன் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. குறித்த இரு பாலங்களும் மிக விரைவில் மக்களின் போக்குவரத்துக்கு திறந்துவிடப்படவுள்ளன. (2-315)

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்திய பொலிஸாருக்கு கௌரவிப்பு



இலங்கை பொலிஸ்திணைக்களத்தின் 151 ஆவது வருடநிறைவை முன்னிட்டு வவுனியாவில் குற்றங்களை கட்டுப்படுத்தி சிறப்பாக செயற்பட்ட பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைவாக உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோ தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கடந்த மாதத்தில் வவுனியாவில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த சிறப்பாக செயற்பட்ட பத்து பொலிஸார் பணப்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து கடமையிலிருக்கும் போது உயிர்த்தியாகம் செய்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கேட்டறிந்து கொண்டதுடன் அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# ஆனைவிழுந்தான் கிராமத்தின் அடிப்படை வசதிகள் இதுவரை பூர்த்தியாகவில்லை

## உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோருகின்றனர்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தின் அடிப்படை வசதிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையினால் இங்கு வாழும் சுமார் ஆயிரத்து 383 பேர் அன்றாடம் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஆனைவிழுந்தான் கிராமத்தில் தற்போது 414 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 383 பேர் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கிராமத்தின் பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை எந்த வீதிகளும் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதனால் இங்குள்ள மக்கள் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைவிட இப்பகுதியில் மாணவர்களுக்கான சீரான கல்வி வசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் இன்றியும் தொழில் வாய்ப்புக்களின்றியும் இங்குள்ள மக்கள் அன்றாடம் துன்பங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளதுடன் தங்களது கிராமத்தின் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)


# வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் விமான நிலையத்தில் கைது

வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இளைஞர் ஒருவர் கனடா செல்வதற்காக முகவர் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். குறித்த முகவர் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே.இராஜலிங்கத்திற்கு அறிமுகமானவர். அதனால் குறித்த இளைஞர் வெளிநாடு செல்வதற்கான பணத்தினை வர்த்தக சங்கத் தலைவரின் வங்கிக் கணக்குக்கு வைப்புச் செய்யுமாறு கோரியுள்ளார். அந்த இளைஞனும் அவ்வாறே வைப்புச் செய்த நிலையில் முகவரால் வெளிநாட்டுக்கு அனுப்பப்படாது ஏமாற்றப்பட்டுள்ளார். இதனையடுத்து குறித்த பணத்தை மீள பெறுவதற்கு இளைஞர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காமையால் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கத் தலைவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு கொழும்பு நீதிமன்றத்தால் அழைப்புக் கட்டளை அனுப்பியிருந்த நிலையில் அவர் ஆஜராகாமையால், இந்தியாவில் இருந்து இலங்கை வந்த நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (2-250)



சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயத்திற்குட்பட்ட கண்டாவளை பிரிவில் கல்மடு நகரில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மானியத்திட்டம், கடன்திட்டம், விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளும் தென்னங்கன்றுகளும் அண்மையில் வழங்கப்பட்டன.

# நடமாடும் சேவை நிறைவு நிகழ்வும் பரிசளிப்பும்


பூநகரி பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த ஒருமாதம் நடைபெற்ற நடமாடும் சேவை நிறைவு நிகழ்வும், பரிசளிப்பும் கடந்த 2ஆம் திகதி எஸ்.கே. திருமணமண்டபத்தில் பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கபில பண்டார தலைமையில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் வடக்குமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் பெர்னாந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

ஏனைய விருந்தினர்களாக மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பூநகரி பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

பாடசாலைமட்டத்தில் நடைபெற்ற பல்வேறு போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் பூநகரி பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும்குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் கொண்ட பொதிகள் மக்கள் வங்கியால் வழங்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# வரட்சி நிவாரணம் பெறுவதற்கு நீண்டநேரம் காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்




(குருமன்காடு)

அதிகாரிகளின் அசமந்தச் செயற்பாட்டால் வவுனியாவில் வரட்சி நிவாரணம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுவதாகவும் பொருட்களை சீராக வழங்குவதில்லை என்றும் பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.




நெளுக்குளம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் வரட்சி உலர் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நேற்றுக் காலை 6 மணி முதல் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காத்திருந்தனர். சுமார் 5 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்களே இவ்வாறு தமக்கு கிராம சேவையாளருடாக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டிற்கான உலர் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட நேரம் காத்திருந்தனர்.

எனினும்பலநோக்குகூட்டுறவுச்சங்கத்தின் முகாமையாளர் அங்கு வந்ததுடன் நீண்டநேரமாக காத்திருந்த பொதுமக்களிடம் தேவையானளவு உணவுப் பொருட்கள் கையிருப்பில்லை. பொருட்கள் வந்து சேரவில்லை. எனவே இன்று(நேற்று) உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் மேற்கொள்ள முடியாது. நாளை வருமாறு தெரிவித்துவிட்டு வாசலில் குறித்த வாசகத்தை காட்சிப்படுத்தி விட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினை பூட்டி விட்டுச் சென்றுள்ளார். இதனால் அங்கு கூடியிருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே ஏற்பட்டுள்ளது.

தாம் அன்றாடம் செய்யும் பல வேலைகளையும் விட்டு விட்டு வேறு வேலைகளுக்கும் செல்லாமல் இப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட நேரமாக காத்திருந்த இம்மக்கள் உலர் உணவுப் பொருட்களின்றி திரும்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, தமக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்களை தமது பகுதிகளிலுள்ள பலநோக் குக் கூட்டுறவு சங்கத்தினூடாக வழங்குமாறும் நீண்ட தூரங்களிலிருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இதனை தாமதப்படுத்தி வழங்கி வருவதாகவும் சீரான முறையில் வழங்கப்படவில்லை என்றும் பொருட்களின் விலைகளில் குறிப்பாக சதொசா நிறுவனத்தில் ஒரு விலையும் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு விலையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.(2-250)




# ஓய்வூதியர் தின நிகழ்வு இம்முறை வவுனியாவில்

(பூநகரி)

நாடளாவிய ரீதியில் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி கொண்டாடப்படும் ஓய்வூதியர் தினம் இம்முறை முதல் தடவையாக மாகாண மட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளதாகவும் அதற்குரிய ஏற்பாடுகளை மேற் கொள்ளுமாறும் ஓய்வூதியத்திணைக்களத்தால் மாவட்ட சங்கங்களுக்கு அறிவிக்கட்டுள்ளது.

வடக்கு மாகாண மட் டத்திலானன ஓய்வூதியர் தினக் கொண்டாட்டம் வவுனியாவில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றது. வவுனியாவில் நடைபெறும் கொண்டாட்டங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா 100 பேர் வீதம் 500 ஓய்வூதியர்கள் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள்.

அன்றைய தினம் பல்வேறுபட்ட போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கு மாவட்ட ரீதியிலும் மாகாண ரீதியிலும் பரிசுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓய்வூதியர்கள் ஓய்வு பெறுவதில்லை என்ற தலைப்பில் சிறுகதைப் போட்டியும் ஓய்வூதியரும்சமூகமும்என்றதலைப்பில் கவிதைப்போட்டியும் நடைபெறவுள்ளது. விளையாட்டுப் போட்டி நிகழ்வாக பலூன் உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், ஊசி நூல் கோர்த்தல் , இடைவிடாது சிரித்தல் ஆகியவை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் வாகன விபத்தில் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா, பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் படுகாய மடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரில் இருந்து தனது வீடு நோக்கி தாண்டிக்குளம் - புதுக்குளம் வீதியில மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் க.பார்த்தீபன் 'பத்தினியார் மகிழக்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது வீதியில் நின்ற மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இதில் அவர் படுகாயமடைந்த நிலையில் அவ்வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்துக் குறித்து ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (2-250)

# கிளியில் 200 ஆவது நாளைக் கடந்தும் உறவுகளின் போராட்டம் தொடர்கின்றது





(பரந்தன்)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை 200 ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டமே இரவு பகலாக பல பொய் வாக்குறுதிகளின் மத்தியிலும் தீர்வின்றி தொடர்கிறது. (2-312)

# படப்பிடிப்பு செய்ய ஆடுகள் தேவை; சூட்சுமமான முறையில் 15 ஆடுகள் திருட்டு

(குருமன்காடு)

வவுனியாவில் சூட்சுமமான முறையில் 15 ஆடுகள் திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் ஆட்டுப்பட்டி வைத்திருக்கும் ஒருவரிடம் ஹயஸ் ரக வாகனத்தில் சென்ற நபர் தான் படப்பிடிப்பு செய்யவுள்ளதாகவும் அதற்கு 15 ஆடுகள் தேவை எனவும் கூறியுள்ளார். இதற்கு ஆட்டு உரிமையாளரும் சம்மதித்த நிலையில் பிறிதொரு இடத்தில் படப்பிடிப்பு நடப்பதால் ஆடுகளை கொண்டு செல்ல வேண்டும் என 15 ஆடுகளையும் ஹயஸ் ரக வாகனத்தில் ஏற்றியுள்ளதுடன், ஆடுகளை வழங்கியமைக்காக ஆட்டு உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய் பணத்தை வாடகையாகக் கொடுத்துள்ளார். ஆடுகளை ஏற்றிக் கொண்டு ஆட்டு உரிமையாளரையும் அழைத்துக் கொண்டு வவுனியா நகரை நோக்கி வந்த குறித்த நபர் பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்திற்கு அருகில் உள்ள இராணுவ உணவுச்சாலை அருகே வாகனத்தை நிறுத்தி விட்டு சோடா ஒன்று வாங்கி வருமாறு 200 ரூபாய் பணத்தை கொடுத்து ஆட்டு உரிமையாளரை வாகனத்தில் இருந்து இறக்கியுள்ளார்.

சோடா வாங்கிக் கொண்டு வாகனம் நின்ற இடத்திற்கு ஆட்டு உரிமையாளர் வந்த போது வாகனம் அவ்விடத்தில் இல்லை. ஆடுகளும் இல்லை. இதனையடுத்து திட்டமிட்டு திருட்டு இடம் பெற்றதை உணர்ந்த ஆட்டு உரிமையாளர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொணடு வருகின்றார்கள்.(2-250)

# ஒத்துழைப்புக்கள், ஆலோசனைகள் இன்றி எவராலும் தனித்து நின்று சாதிக்கமுடியாது

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

தனி ஒரு அரசியல்வாதியாக இருந்து கொண்டு எதனையும் சாதிக்க முடியும் என்று நினைத்துக்கொள்ள முடியாது. அதிகாரிகளினதும், துறைசார்ந்த சகல உத்தியோகத்தர்களினதும், மக்களினதும் பூரண ஒத்துழைப்பும்,விசேடமாக ஆலோசனைகளும் இல்லா விட்டால் ஒருவராலும் தனித்து நின்று சாதிக்க முடியாது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.



மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குண சீலனுக்கு நேற்று வியாழக் கிழமை காலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ரதனி தலைமையில் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், சுகாதார அபிவிருத்தி யில் எங்களுடைய திணைக் களத்திற்குரிய வழங்கல் குறைவாக உள்ளமை ஒரு புறம் இருந்தாலும், நிர்வாகம் தொடர்பாக பல குறைபாடுகள் இருக்கின்றமை உண்மை.

மன்னார் மாவட்டத்தில் சுகாதாரத் துறையில் பல்வேறு பிரச்சினைகளும், குறை பாடுகளும் காணப்படுகின்றன.

உண்மையான வளர்ச்சிக்கு நிர்வாகத் திருத்தமும் மிக முக்கியம்.

ஒழுங்கற்ற அல்லது சீர் அற்ற நிர்வாகம் ஆகியவை கூட சரியான அபிவிருத்தியை பின் தள்ளவோ அல்லது காலம் தாழ்த்தவோ செய்து முடிக்கவோ தடையாகவே இருக்கும்.

எனவே சரியான நிர்வாகமும், நிர்வாகத்திறனும் இருக்க வேண்டும்.நிர்வாக அலுவலகரில் இருந்து கள நில ஊழியர்கள் வரைக்கும் கடமையைச் செய்வதற்கு சரியான முறையை பயன் படுத்த வேண்டும். முடிவுகள் எடுக்கும் போது நிர்வாக முறைகளுக்கு முரணாகவும், தனிப்பட்ட முறையில் பிழையான முடிவுகளை எடுப்பதற்கும் தள்ளாமல் என்னை பாதுகாக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நிகழ்வில் மன்னார் உதவி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் தியர் கில்றோய் பீரிஸ், மலேரியா நோய் தடுப்பு பிரிவின் மன்னார் மாவட்ட பிராந்திய வைத்திய அதிகாரி டாக்டர் கே.அரவிந்தன், பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள்என பலர்கலந்து கொண்டிருந்தனர். (2-4)

# கிருசாந்தியின் நினைவுதினம் செம்மணியில் அனுஷ்டிப்பு









யாழ்ப்பாணம் செம்மணியில் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று 7 ஆம் திகதி செம்மணிப் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது. கிருசாந்தியுடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களும் இதன்போது நினைவுகூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. வறுமைக் கோட்டிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 21 பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் 63 மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நினைவு நிகழ்வில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் பிரதான சுடரை ஏற்றினார். தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அஞ்சலி செலுத்தி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் எனப்பலரும் இந்த நினைவு நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.காளின்)

# சரத் பொன்சேகாவின் கருத்து அரசின் நிலைப்பாடு அல்லவாம்

## அமைச்சர் கிரியெல்ல கூறுகிறார்

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தொடர்பாக, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளியிட்டது, அவரது தனிப்பட்ட கருத்தே என்றும், அது அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல என்றும், நாடாளுமன்றத்தில் அவை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அறிவித்துள்ளார்.

அத்துடன், முன்னைய அரசாங்கத்தைப் போன்று, தற்போதைய அரசாங்கம் இராணுவத் தளபதிகளை ஒருபோதும் சிறையில் அடைக்காது. ஆயுதப் படையினரை எந்தவொரு வெளிநாட்டு நீதிமன்றமும் தண்டிப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

இறுதிக்கட்டப் போர்க் காலத்தில் ஜெனரல் ஜெயசூரிய குற்றங்களை இழைத்திருந்தார் என்றும், அதுகுறித்து சாட்சியமளிக்க தாம் தயாராக இருப்பதாகவும், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியிருந்தார்.



இதுகுறித்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கூட்டு எதிரணியின் தலைவரான தினேஷ் குணவர்த்தன கேள்வி எழுப்பினார்.

ஜெனரல் ஜெயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? நாட்டின் பாதுகாப்பு படையினரை காட்டிக் கொடுக்கும் அரசாங்க உறுப்பினர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? என்று அவர் கேள்விகளை எழுப்பினார்.

அத்துடன் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மற்றும் ஏனைய இராணுவ அதிகாரிகள், தூதுவர்கள், வெளிநாடுகளில் உள்ள இராஜதந்திரிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

மேலும், வெளிநாடுகளில் பாதுகாப்புப் படையினரை பாதுகாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தினேஷ் குணவர்த்தன கோரினார்.


இதற்குப் பதிலளித்த, அவை முதல்வரான லக்ஸ்மன் கிரியெல்ல, இந்தக் கேள்விகளுக்கு இரண்டு வாரங்களில் பதிலளிக்கப்படும் என்று கூறினார்.

இதற்கு கூட்டு எதிரணியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்படும் என்று சபாநாயகர் அறிவித்தார். (இ-7)

# வடமாகாண விவசாயக் கண்காட்சி

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடியசந்தையை நோக்கிய நிலைபேறான விவசாயம் எனும் தொனிப் பொருளிலான வடமாகாண விவசாயக் கண்காட்சி எதிர்வரும் 18.09.2017 திங்கட்கிழமை முதல் 22.09.2017 வெள்ளிக்கிழமை வரை 5 நாட்கள் காலை 8.30 மணி முதல் இரவு 8 மணிவரை யாழ்ப்பாணம் பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சிநிலையம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இணைந்த வளாகத்தில் இடம்பெறவுள்ளது. அனைவரும் இக்கண்காட்சியில் பங்குபற்றி பயன்பெறுமாறு வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (இ-3)

# தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கிருஷ்ணகுமாரின் மணிவிழா நாளை



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமாரின் மணிவிழா நிகழ்வு நாளை 9 ஆம்திகதிசனிக்கிழமைகாலை 9 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் க.அருந்தவபாலன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில்ஆசியுரையை யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா, சாவகச்சேரி லிகோரியார் தேவாலய பங்குத் தந்தை வண. பிதா ம.றெக்ஸ் சவுந்தரா, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரையை யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி தே.நிதர்சனா (கவி வாழ்த்து), கல்வயல் டேனியா முன்பள்ளி ஆசிரியர் திருமதி பா.சுவேந்தினி, யா/நாவற்குழி மகா வித்தியாலய ஆசிரியர் சு.சுதர்சன், யா/கச்சாய் அ.த.க.பாடசாலை அதிபர் கா.குணசிங்கம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உபதலைவர் வ.ஸ்ரீபிரகாஷ், தென்மராட்சி இலக்கிய அணியின் ''நற்றமிழ் வேந்தன்'' த.நாகேஸ்வரன் (கவிவாழ்த்து), world vision நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அ.கி. றொசைறோ, தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினிபாபு, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், கிழக்கு மாகாண கல்வியமைச்சர் சி.தண்டாயுதபாணி, வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். மேலும் இந்நிகழ்வில் நூல் வெளியீடு இடம்பெறும். இதனை தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் வெளியிட்டு வைப்பார். (இ-3)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்தால் தேர்தல் தாமதமாகும்

## பிரதமர் ரணில் விளக்கம்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் மீண்டும் திருத்தங்களை கொண்டு வந்தால் தேர்தல் நடத்தப்படுவது காலதாமதமாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஏற்பாட்டில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரிடம் டலஸ் அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச சேவையிலுள்ள சில ஊழியர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது என்றால் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு முன்னதாக சேவையிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த ஏற்பாட்டின் மூலம் அந்த அரச ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் டலஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டத்தில் மீண்டும் திருத்தங்களை கொண்டு வந்தால் தேர்தல் நடத்தப்படுவது மேலும் தாமதமாகும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டத் திருத்தம் கொண்டு வருவது குறித்து கட்சித் தலைவர்களுடன் பேசி தீர்மானிக்க வேண்டும் என்றும் பிரதமர் கூறியுள்ளார். (இ-7)


**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர்
திருவாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார்
(B.Sc, PGDE., SLEAS-II)
அவர்களின்

# 60 மணிவிழா



**சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார்**

இடம்:
கலாசார மண்டபம் சிவன் கோவில் வீதி,
சாவகச்சேரி.

காலம்:
09.09.2017 சனிக்கிழமை
காலை 9.00 மணி

தலைவர்:
திரு.க.அருந்தவபாலன் அவர்கள்

—நிகழ்ச்சிநிரல்—

* மங்கல விளக்கேற்றல்:
* வலயகீதம் இசைத்தல்: திருமதி. புனிதகுமாரி ஈழநேசன் அவர்கள் (ஆசிரிய ஆலோசகர் தென்மராட்சி கல்வி வலயம்)
* வரவேற்புரை: திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் (பொருளாளர்-விழாக்குழு)
* ஆசியுரைகள்:
  - ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் (சின்மயாமிஷன், யாழ்ப்பாணம்)
  - வணபிதா.ம.றெக்ஸ் சவுந்தரா அவர்கள் (பங்குத்தந்தை, லிகோரியார் தேவாலயம், சாவகச்சேரி)
  - கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் (தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம்)
* தலைமையுரை:
* வாழ்த்துரைகள்: செல்வி.தே.நிதர்ஷனா அவர்கள் (கவி வாழ்த்து) (மாணவி,யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை)
  - திருமதி பா.சுவேந்தினி அவர்கள் (ஆசிரியர், டேனியா முன்பள்ளி, கல்வயல்)
  - திரு.சு.சுதர்ஷன் அவர்கள் (ஆசிரியர், யா/நாவற்குழி மகாவித்தியாலயம்)
  - திரு.கா.குணசிங்கம் அவர்கள் (அதிபர், யா/கச்சாய் அ.த.க.பாடசாலை)
  - திரு.வ.ஸ்ரீபிரகாஷ் அவர்கள் (உபதலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)
  - 'நற்றமிழ் வேந்தன்' த.நாகேஸ்வரன் அவர்கள் (கவி வாழ்த்து) (தென்மராட்சி இலக்கிய அணி)
  - திரு.அ.கி.றொசைறோ அவர்கள் (நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், வேர்ல்ட் விஷன்)
  - பேராசிரியர், க.கந்தசாமி அவர்கள் (தலைவர், தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்)
  - திரு.சு.சுந்தரசிவம் அவர்கள் (வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)
  - திருமதி தேவரஞ்சினி பாபு அவர்கள் (பிரதேச செயலர், தென்மராட்சி)
  - திரு.முத்து. இராதாகிருஷ்ணன் அவர்கள் (வலயக் கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு)
  - திரு.செ.உதயகுமார் அவர்கள் (மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
  - திரு.இ.இளங்கோவன் அவர்கள் (கௌரவ ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம்)
  - கௌரவ கே.சயந்தன் அவர்கள் (வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
  - கௌரவ கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி அவர்கள் (கிழக்கு மாகாணசபை)
  - கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரன் அவர்கள் (வடக்கு மாகாணசபை)
* நூல் வெளியீடு
* வெளியீட்டு வைப்பவர்: திருமதி சி.சிவநாதன் அவர்கள் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம்)
* விழா நாயகர் கௌரவிப்பு:
* ஏற்புரை: விழாநாயகன்
* நன்றியுரை: திரு.கா.சிவஞானசுந்தரம் (செயலாளர்- விழாக்குழு)

Congratulations

தங்களை அன்புடன் அழைக்கின்றோம் "மணிவிழா" குழுவினர்.

விளம்பர அனுசரணை: சீதா ஜூவல்லறி, இல.01, புதிய சந்தை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்



# பாராட்டுகிறோம் வாழ்த்துகிறோம் அகமகிழ்கிறோம்

## கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம்

B.A (Hons), Tamil (SPL), P.G.D.E, M.A. Tamil (Ind), M.E.D



கடந்த 06.09.2017 அன்று யாழ். உயர்நீதிமன்ற நீதிபதி கௌரவ மா.இளஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டமையை பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
மு.விக்னேஸ்வரன்(மாமா), வி.மங்களகௌரி(மாமி),
வி.தனுசன்(மைத்துனர்),
ச.தாட்ஷாயினி(மனைவி), ச.திசானா(மகள்).

"கௌரி வாசம்",
பிள்ளையார் கோவில், கோப்பாய்.

(சி-9565)



## புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்
## கல்வியாண்டு 2015/2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை கழகத்திற்கு கல்வியாண்டு 2015/2016 இல் நுண்கலைமாணிப்பட்ட கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் (Orientation Programme) 11.09.2017ம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இராமநாதன் நுண்கலைக்கழகப் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

மாணவர்கள் குறிப்பிட்ட திகதியில் காலை 8.00 மணிக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள வெளிமாவட்ட மாணவர்கள் 10.09.2017ம் திகதி மாலை 6.00 மணிக்கு முதல் விடுதிக்கு சமுகம் தருமாறு கேட்கப்படுகிறீர்கள்.

மாணவர்கள் நிகழ்ச்சி நிரலை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலோ www.ifn.ac.lk/arts எனும் இணையத்தளத்திலோ பார்வையிடலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-9568)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 16செவ் 4 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில்
தொ.இ: B/7708

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 48
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:கனடாகுடியுரிமை
தொ.இ: B/7717

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 60சூரிசெவ் 8 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்:A/L/கனடா PR
தொ.இ: B/7718

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
தகைமை/தொழில்:பட்டதாரி/அரசதொழில்
தொ.இ: B/7721

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 8செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/7711

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:HNDA/அரசதொழில்
தொ.இ: G/7713

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 17செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/Lஎதிர் பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7714

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 44செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BAஎதிர் பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7715

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாரதம்

## இந்திய சிறுவனின் உலக சாதனை



(சார்ஜா)

சார்ஜாவில் வசிக்கும் 14 வயதான இந்திய சிறுவன் மன்சூர் அனீஸ் விமானத்தை இயக்கி உலக சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவை சேர்ந்த சிறுவன் மன்சூர் அனீஸ் (வயது 14). இவன் சார்ஜாவில் குடும்பத்துடன் வசித்து வருகிறான்.

அங்குள்ள பாடசாலைகளில் 9 ஆம் வகுப்பு படித்து வரும் மன்சூர் அனீசுக்கு சிறு வயது முதலே விமானத்தை இயக்குவதில் ஆர்வம் இருந்துள்ளது. சிறுவனின் ஆர்வத்தை பார்த்த அவனது உறவினரான இந்திய விமானி ஒருவர், அவனுக்கு விமான தொழில்நுட்பம் குறித்து விளக்கி கூறினார்.

அவர், மன்சூர் அனீசுக்கு 7 வயதாக இருக்கும்போது விமானிகள் பயிற்சி பெறும் 'சுமூலேட்டர்' எனப்படும் செயற்கை விமான அமைப்பு மூலம் விமானம் இயக்குவது குறித்து பயிற்சி அளித்தார்.

அதனைத்தொடர்ந்து சிறுவன் கனடாவில் உள்ள விமான பயிற்சி அகடமியில் 25 மணி நேரம் பயிற்சி பெற்றான்.

பின்னர், கனடாவில் தன்னந்தனியாக விமானத்தை இயக்கி சாதனை படைத்துள்ளான்.

ஏற்கனவே ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த 15 வயது சிறுவன் 35 மணி நேரம் பயிற்சி பெற்று தனியாக விமானம் இயக்கியதே இதுவரை சாதனையாக இருந்தது.

அதை முறியடிக்கும் வகையில் 25 மணி நேரம் பயிற்சி பெற்ற 14 வயதான மன்சூர் அனீஸ் விமானத்தை இயக்கி சாதனை படைத்துள்ளான். இதனால் அவனை உலகின் மிக குறைந்த வயது விமானியாக விமான பயிற்சி அகடமி தேர்வு செய்துள்ளது. (3-8)

## இரசாயன வெடிகுண்டு போட்டது சிரியாதான்
## ஐ.நா. விசாரணையில் அம்பலம்

(ஜெனீவா)

இட்லிப் நகரில் விஷ குண்டு போட்டதில் 87 பேர் பலியானது தொடர்பாக ஐ.நா. நடத்திய விசாரணையில், இந்த தாக்குதலை சிரியா செய்தது உறுதியாகி உள்ளது.



சிரியாவில் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. எதிர்த்தரப்பு மக்கள் உள்ள இட்லிப் மாகாணத்தில் உள்ள கான்செய்க்குன் நகரில் கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி இரசாயன வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஏராளமான குழந்தைகள் உட்பட 87 பேர் பலியானார்கள். இந்த செயலில் ஈடுபட்டது சிரியா இராணுவத்தை சேர்ந்த போர் விமானங்கள்தான் என்று குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால், சிரியா இதை மறுத்து வந்தது. 2013 ஐ.நா. ஒப்பந்தப்படி நாங்கள் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தவில்லை என்று சிரியா கூறியது.

இருப்பினும், ஐ.நா. சார்பில் விசாரணை குழு அமைக்கப்பட்டது. விசாரணை அறிக்கை தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், 'இட்லிப் மாகாணத்தில் நடந்த தாக்குதலில் விஷகுண்டுகள் போட்டது சிரியா விமானப் படை விமானங்கள்தான். இதற்கான அனைத்து பொறுப்புகளையும் அவர்களே ஏற்க வேண்டும். இது தவிர 2013 மார்ச் முதல் இதுவரை நடந்த இரசாயன தாக்குதலில் குறைந்தது 23 தாக்குதல்கள் சிரியா இராணுவத்தால் நடத்தப்பட்டுள்ளன. இதற்கான புகைப்பட ஆதாரம், நேரில் பார்த்தவர்களின் வாக்குமூலம் கிடைத்துள்ளது.

ஏப்ரல் 4ஆம் திகதி சிரியா விமானப் படையை சேர்ந்த 4 எஸ்யு-22 ரக விமானங்கள் இந்த தாக்குதலில் ஈடுபட்டன. மொத்தம் 3 குண்டுகள் வீசப்பட்டன. அதில் ஒன்று இரசாயன குண்டு' என்று கூறப்பட்டுள்ளது. ஐ.நா. அறிக்கை நேரடியாக குற்றம்சாட்டி இருப்பதால் பல்வேறு தடை நடவடிக்கைகள் இனிமேல் சிரியா மீது எடுக்கப்படும் என்று தெரிகிறது. (3-8)

## களமிறங்கியது பின்லேடனை தீர்த்துக்கட்டிய சிறப்புப்படை

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடனை தீர்த்துக் கட்டிய அமெரிக்க சிறப்புப் படையினரால் வடகொரிய தலைவர் கிம் ஜாங் கொல்லப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியா ஆறாவதாக அணுஆயுத சோதனை மேற்கொண்ட அடுத்த நாளில் குறித்த சிறப்புப் படையானது நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.

Seal Team Six எனப்படும் இந்த அதிரடிப் படையானது உலகில் ஆபத்தானதும் மிகவும் சக்தி வாய்ந்ததுமான ஐதரசன் அணுகுண்டு சோதனைக்கு பின்னர் களமிறக்கப்பட்டுள்ளது.

மேலும் Seal Team Six சிறப்புப்படையுடன் தென் கொரியாவின் பாதுகாப்பு அமைச்சரகம் இணைந்து செயற்படுமென தெரிய வந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இதனை தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி தென் கொரியாவின் பாதுகாப்பு அமைச்சரும் இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதிக்கு முன்னதாக அமெரிக்க-தென் கொரிய நாடுகள் இணைந்து வடகொரிய தலைவரை படுகொலை செய்யும் சிறப்பு குழு ஒன்றை தெரிவு செய்வார்கள் என தெரிய வந்துள்ளது. (3-8)

## நீட்தேர்வுக்கு எதிரான போராட்டம் நான்காவது நாளாகவும் நீடிப்பு



(திருச்சி)

நீட் தேர்வை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும், மாணவி அனிதாவின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி, நேற்று 4-வது நாளாக தமிழகம் முழுவதும் மாணவர்களின் போராட்டம் நீடித்திருந்தது.

நீட் தேர்வை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும், மாணவி அனிதாவின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நேற்று 4-வது நாளாக தமிழகம் முழுவதும் மாணவர்களின் போராட்டம் நீடித்து வருகிறது.

அரியலூர் அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கடந்த செவ் வாய்க்கிழமை இரவு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் பாடசாலை மாணவர்களையும் போராட்டத்திற்கு அழைத்தனர்.

போராட்டத்தின் தீவிரம் அறிந்த கல்லூரி நிர்வாகம் நேற்று முன்தினம் முதல் 3 நாட்களுக்கு விடுமுறை அறிவித்து உத்தரவிட்டது.

இதனால் கல்லூரி மூடப்பட்டு விடுதியும் அடைக்கப்பட்டது. வெளியூர் மாணவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு சென்றனர்.

ஆனால் உள்ளூர் மாணவர்கள் தங்களது போராட்டத்தை கைவிட மறுத்து விட்டனர்.

நீட் தேர்வை ரத்து செய்யும் வரை போராட்டத்தை கைவிடமாட்டோம்என்று உறுதிபட கூறியுள்ளனர். (3-8)

## வடகொரியாவை கட்[...] அமெரிக்காவின் அ[...]

(வோஷிங்டன்)

வட்கொரியாவுக்கு எரிபொருள் கொண்டு செல்வதை நிறுத்தவும், அந்நாடு ஜவுளி ஏற்றுமதி செய்வதற்கு தடை கோரியும் ஐ.ந.ா பாதுகாப்பு சபையில் அமெரிக்கா வரைவு தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது.




உலக நாடுகளின் எதிர்ப்புகளையும், பொருளாதார தடைகளையும் பொருட்படுத்தாத வடகொரியா சமீப காலமாக பலமுறை அணு குண்டுகளையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் பல

## கட்டடத்தில் தீ விபத்து
## 5 பேர் பலி

(மும்பை)

மராட்டிய மாநிலம் மும்பையில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தில் காஸ் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மராட்டிய மாநிலம் மும்பையில் ஜுஹு பகுதியில் உள்ள கிசோர் குமார் கார்டன் பகுதியில் புதிதாக அடுக்குமாடி குடியிருப்பின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு அங்கு வெல்டிங் பணிக்காக வைத்திருந்த காஸ் சிலிண்டர்கள் திடீரென வெடித்து சிதறியது.

இதில் கட்டடத்தில் தீ பரவியது. இக்கோர விபத்தில் கட்டுமானப் பணியிலிருந்த 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 8 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (3-8)

# வெளிநாடு

# தயார் நிலையில் தாட் ஏவுகணைகள்

## வடகொரியாவின் மிரட்டலை தொடர்ந்து தென்கொரியா நடவடிக்கை



(சியோல்)

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தாட் ஏவுகணைகள் தென் கொரிய எல்லையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தென் கொரியா தலைநகரான சியோலில் இருந்து 217 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சியோங்ஜி நகர எல்லையில் 4 ஏவுகணைகளும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

இங்கு இரண்டு தாட் ஏவுகணைகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள நிலையில் மேலும் 4 ஏவுகணைகள் தற்போது நிறுவப்பட்டுள்ளன.

தாட் ஏவுகணைகளை நிறுவ அந்நாட்டு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் 8,000 பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

எதிரி நாட்டு ஏவுகணைகளை ரேடார் மூலம் கண்டறிந்து வானிலேயே இடைமறித்து தாக்கும் வல்லமை கொண்டது தாட் ஏவுகணை. இந்த ஏவுகணைகளை தென்கொரியாவில் நிறுவுவதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா கடந்த ஞாயிறு அன்று ஐதரசன் குண்டை வெடித்து சோதனை செய்தது.

வடகொரியா அடுத்தடுத்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து அமெரிக்காவுக்கு பகிரங்க மிரட்டல் விடுத்து வருகிறது.

இதனைத் தொடர்ந்து ஜூலை மாதம் அமெரிக்கா பசுபிக் கடலில் தாட் ஏவுகணைகளை சோதனை செய்தது.

இந்த சோதனையை தொடர்ந்து தென்கொரியாவில் தாட் ஏவுகணைகள் நிறுவப்பட்டுள்ளன. (3-8)

## "இர்மா" புயலின் தாக்கம்



### கரீபியன் பகுதியில் 6 பேர் பலி

(பிரான்ஸ்)

வடக்கு அட்லாண்டிக் கடலில் உருவாகியுள்ள 'இர்மா' புயலின் தாக்கத்தினால் கரீபியன் கடல் பகுதியில் பிரான்ஸ் அரசுக்கு சொந்தமான செயிண்ட் மார்டின் தீவுகளில் 6 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் புதிதாக உருவான சக்திவாய்ந்த இர்மா புயல் கரீபியன் நாடுகளை பதம் பார்க்கத் தொடங்கி உள்ளது.

இர்மா புயல் காரணமாக செயின்ட் மார்ட்டின், செயின்ட் பார்தலெமி ஆகிய தீவுகளில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது.

சுழற்றி அடித்த காற்றில் வீடுகளின் கூரைகள் பறந்தன. மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. மரங்கள் வேருடன் சாய்ந்தன. தெருக்களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஏராளமான வாகனங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.

இந்நிலையில், இப் புயலினால் பிரான்ஸ் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள செயின்ட் மார்ட்டின் தீவுகளில் 6 பேர் வரை பலியானதாக பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.


'இர்மா' புயல் அமெரிக்காவின் புளோரிடா மாகாணம், கரீபியன் நாடுகளான ஹைதி, கியூபா, டொமிகன் குடியரசு, புயிட்ரோ ரிகோ ஆகிய நாடுகளை தாக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

இப்புயலால் கடலில் மாபெரும் அலைகள் உண்டாகலாம் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. 'இர்மா' புயல் எச்சரிக்கையால் புளோரிடா மாகாணத்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (3-8)

## ஆளுநரை சந்தித்தார் தினகரன்

### முதலமைச்சரை மாற்ற வலியுறுத்தல்





(சென்னை)

டிடிவி தினகரன் நேற்று தனது ஆதரவு எம்.எல்.ஏ.-எம்.பிக்களுடன் ஆளுநர் வித்யாசாகர் ராவை சந்தித்து முதலமைச்சரை மாற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் நேற்று ஆளுநரைச் சந்திப்பதற்கு அனுமதி கேட்டு இருந்தனர். ஆளுநர் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து நேற்று அதிகாலையில் புதுவையில் தங்கி இருந்த எம்.எல்.ஏக்கள் அனைவரும் காரில் சென்னை புறப்பட்டனர்.

சென்னை வந்து ஹோட்டலில் தங்கியிருந்த அவர்கள், நண்பகல் ஆளுநரைச் சந்திப்பதற்காக புறப்பட்டனர். 12.45 மணியளவில் தினகரன் தலைமையில் அவரது ஆதரவு எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள் ஆளுநரைச் சந்தித்தனர். இச் சந்திப்பின்போது தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளை விளக்கியதுடன், முதலமைச்சரை மாற்ற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (3-8)

## ட்டுப்படுத்தும் அடுத்த திட்டம்

ஏவுகணைகளையும் பரிசோதித்துள்ளது.

இச் சோதனைகள் அமெரிக்காவை மீண்டும் ஆத்திரப்படுத்தியுள்ளது. இதனால், வடகொரியா மீது கடுமையான தடைகளை கொண்டுவந்து நெருக்கடி கொடுக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா ஒரு வரைவு தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளது.

அதில், எண்ணெய் பொருட்களை வடகொரியாவுக்கு கொண்டு செல்வதற்கு தடை, வடகொரியாவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஜவுளி உள்ளிட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு தடை, அந்நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்-க்கு சொந்தமான சொத்துக்களை முடக்குவது மற்றும் அவர் பயணம் செய்வதற்கு தடை ஆகிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் மற்ற நாடுகளான சீனா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை ஆதரித்து வாக்களிக்கும் பட்சத்தில் இந்த தீர்மானம் நிறைவேறும்.

ஏதேனும் ஒரு நாடு எதிர்ப்பு தெரிவித்தாலும் தீர்மானம் செயலற்றதாகிவிடும்.

வடகொரியாவின் எண்ணெய் தேவையை ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பூர்த்தி செய்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)



ஈழத்தில் நடந்த படுகொலைகளைக் கண்டித்து ஐ.நா.நோக்கிய பேரணியை வலுப்படுத்தவும் ஐரோப்பிய நாடுகளிடம் நீதி கோரியும் ஐரோப்பிய ஒன்றிய முன்றலில் இருந்து ஐ.நா. நோக்கிய மனிதநேய ஈருருளிப் பயணம் நேற்று முன்தினம் 6 ஆம் திகதி நண்பகல் ஆரம்பித்தது.

## இந்தியா, போருக்கு தயாராக வேண்டும்

### இராணுவ தளபதி அழைப்பு


(டில்லி)

இந்தியா இருமுனை போருக்கு தயாராக வேண்டும் என்று டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் இராணுவ தளபதி பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், இராணுவ தளபதி பிபின் ராவத் கலந்து கொண்டார். அங்கு அவர் பேசியதாவது,

டோக்லாம் பிரச்சினை, 73 நாட்களாக நீடித்தது. சீனா, முறுக்கிக்கொண்டு இருக்கிறது. இந்த பிரச்சினை, படிப்படியாக பெரிய மோதலுக்கு வழிவகுத்துவிடும். அதுபோல், பாகிஸ்தான் இராணுவமும், அரசியல்வாதிகளும் நமது நாட்டை எதிரியாக பார்க்கின்றனர். பாகிஸ்தானுடன் இணக்கத்துக்கு வாய்ப்பே இல்லாதது போன்று தோன்றுகிறது.

இவ்விரு நாடுகளுடனான மோதல், ஒரு குறிப்பிட்ட இடத்துக்குள், குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிந்துவிடக்கூடும் அல்லது முழு அளவிலான போராக உருவெடுக்கக்கூடும்.



எனவே, இந்தியா இருமுனை போருக்கு தயாராக வேண்டும். முப்படைகளில் இராணுவத்தின் முன்னுரிமை நீடிக்க பாடுபட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (3-8)

## 'இனியும் அமைதியாக இருக்கமாட்டேன்'

# கோத்தபாய ராஜபக்ஷ பகிரங்க எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் போது நான் தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது; அவ்வாறு இருக்கவும் மாட்டேன் என்று அரசிற்கு பகிரங்க எச்சரிக்கை விடுத்தார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.



பொரலஸ்கமுவவில் நேற்று முன்தினம் எலிய என்ற அமைப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில், 'எலிய- ஒளிமயமான அபிலாசைகள்' என்ற பெயரிலான புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

பொரலஸ்கமுவவில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை இந்த அமைப்பின் தொடக்கவிழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்களான சமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிரணியில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசர் சரத் என் சில்வா, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் இராஜதந்திரிகளான தாமரா குணநாயகம், கலாநிதி தயான் ஜெயதிலக, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் உரையாற்றிய கோத்தபாய ராஜபக்ஷ,

"பிரிவினைவாதிகள் தீவிரவாதத்தின் ஊடாக அடைய முடியாததை, புதிய அரசியலமைப்பு வழங்கும். இதனை தோற்கடிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் அனுதாபிகள், புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர்கள், ஒரு பகுதி வெளிநாட்டு சக்திகளை திருப்திப்படுத்தவே இந்த அரசியலமைப்பு மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போருக்குப் பிந்திய இலங்கையை இனரீதியாகப் பிரிக்கவே, தற்போதைய கூட்டு அரசாங்கம் வழிதேடுகிறது. பிரிவினைவாத ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தும் அரசாங்கத்தின் இந்த முயற்சியை மக்கள் எதிர்க்க வேண்டும்.

எந்தவொரு சூழ்நிலையிலும் அரசாங்கம் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு எலிய அமைப்பு அனுமதியாது.

நாட்டின் ஒன்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு, புதிய அரசியலமைப்பை கொண்டு வரும் முயற்சிகளுக்கு எதிராக மக்கள் வழி நடத்தப்பட வேண்டியது முக்கியம்.

அரசியலமைப்பு என்ற போர்வையில் நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும் போது, அமைதியாக இருக்க முடியாது.

இறுதிக்கட்டப் போரில் விடுதலைப் புலிகளை பாதுகாக்க முற்பட்ட நாடுகளே இந்த அரசியலமைப்பு உருவாக்கத்துக்குப் பின்னால் இருக்கின்றன.

புதிய அரசியலமைப்பை எலிய எதிர்க்கும். தீவிரவாதத்தை தோற்கடித்து பெற்றதை பாதுகாக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இராணுவத்தினர் பெரும் தியாகங்களை செய்துள்ளனர். நாட்டின் இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை சிதைக்கும் எந்த முயற்சிகளுக்கும், எந்த விலை கொடுத்தாவது எதிர்க்க வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மொஹமட் சியாம் படுகொலை வழக்கு; வாஸின் மனு டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன அவருடை மகன் ரவிந்து வாஸ் குணவர்தன உட்பட அறுவரால், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி எடுத்துக்கொள்வதற்கு, உயர் நீதிமன்றம், நேற்று முன்தினம் தீர்மானித்தது.

அந்த மனு, நீதியசர்களான ஈவா வனசுந்தர, பிபி அலுவிஹார, சிசிர டி அப்றூ ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில், நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுதாரர்கள் சார்பிலான ஆவணங்கள் சில சமர்ப்பிக்கப்பட வேண்டும் என, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரலால் கோரப்பட்டது.


அதன் அடிப்படையில், ஆவணங்களை வழங்குவதற்கான தினமாக, மேற்குறிப்பிட்ட தினத்தை, நீதியரசர்கள் குழாம் அறிவித்தது.

2013ஆம் ஆண்டு, பிரபல வர்த்தகரான மொஹமட் சியாம், கம்பஹா மாவட்டத்தின் தொம்பே பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவருடைய படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, மேற்குறிப்பிட்ட அறுவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டது. வாஸ் குணவர்தன, அவருடை மகன் ரவிந்து வாஸ் குணவர்தன உட்பட அறுவரும் படுகொலை செய்துள்ளனர் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி ஊர்ஜிதமாகியுள்ளதாக அறிவித்த, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான லலித் ஜயசூரிய (தலைவர்), சரோஜினி குசலா வீரவர்தன, அமேந்திர செனவிரத்ன ஆகியோரடங்கிய ட்ரயல் அட் பார் தீர்ப்பாயம், அவர்களுக்கு மரணதண்டனைத் தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்புக்கு எதிராக, அவர்கள் அறுவராலும் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## என்னால் தண்டனை வழங்க முடியாது

### நீதியமைச்சர் தலதா விளக்கம்



நான் நீதி அமைச்சர் மாத்திரம் தான். அமைச்சருக்கு தவறு செய்பவர்களை தேடி தண்டிக்க முடியாது. நீதி அமைச்சராக இருந்தாலும் அது என்னுடைய பொறுப்பு அல்லவென நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

அரசியலில் உள்ளபோது வேண்டியவாறு பேச முடியும். இருப்பினும், அவ்வாறு செய்ய முடியாது எனவும் நீதி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர், ஜெகத் ஜெயசூரிய தொடர்பில் சரத் பொன்சேகா தெரிவித்துள்ள கருத்துக் குறித்து வினவிய போதே இவ்வாறு அமைச்சர் பதிலளித்துள்ளார். (இ-7

## இன்று ஒரு தகவல்

### நம்மைப் பார்த்துப் பொறாமைப்படுகிறவர்களை என்ன செய்யலாம்?

நம்மைப் பார்த்ததும் பொறாமைப்படுகிறவர்கள் மீது நமக்கு எரிச்சல் வருவது இயற்கை. ஆனால் இச் செயல் அவர்களுக்கும் நமக்கும் இடையே இடைவெளியை உண்டாக்குமே தவிர, எவ்விதப் பயனையும் செய்யாது.

நம்மைப் பார்த்துப் பொறாமைப்படுகிறவர்களை விட்டு நாம் விலகினால் அது நம் எதிரிகளின் பட்டியலை நீளமாக்குவதோடு நமக்கு எதிரான பிரசாரம் கட்டவிழ்ந்து விடப்படுவதற்கு காரணமாகி விடும்.

ஆக, பொறாமைப்படுகிறவர்களை நாம் புறக்கணிப்பது என்பது நமக்குக் கெட்ட பெயரைத் தான் உண்டாக்கும். அதற்காகப் பிள்ளைப்பூச்சியை எடுத்து மடியில் கட்டிக் கொள்ளச் சொல்கிறீர்களா? என உங்களுள் சிலர் வினவலாம்.

அதிர்ஷ்டத்தாலோ உழைப்பாலோ, செல்வத்தாலும் செல்வாக்காலும் நன்கு வளர்கிறவர்கள், தங்களையும் அறியாத வகையில் காழ்ப்புகளையும் சேர்த்தே சம்பாதிக்கிறார்கள் என்பது தான் உண்மை.

அதாவது, நம் வளர்ச்சியால் எவ்வித நேரடிப் பாதிப்பும் அடையாதவர்கள் கூட நம் வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமைத் தீயை மெல்ல மெல்ல மனத்தில் மூட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் முன்பின் தெரியாதவர்கள் எனில் புறக்கணித்து விடலாம். ஆனால் இவர்களே மிக வேண்டியவர்களாக இருந்தால் என்ன செய்வது?

இவர்களைப் புறக்கணிப்பதன் மூலமாகவும் இவர்களைவிட்டு விலகுவதன் மூலமாகவும் இவர்களை அலட்சியம் செய்வதன் மூலமாகவும் இந்த நெருப்பிற்கு நாமே விசிறி வீசக்கூடாது.

மாறாக இதே நபர்களைச் சரிக்கட்டி நம் புகழ்பாடும் பிரசார பீரங்கிகளாக மாற்ற முடியும். எப்படி? முதலில் இவர்களை எங்கு கண்டாலும் பிரிய மாகப் பேசிக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நம் வளர்ச்சியை வெளிக்காட்டி கொள்ளாமல் எப்போதும் போல் இயல்பாகப் பழக வேண்டும். இன்னும் சொல்லப் போனால் ஒரு படி கீழே இறங்கிப் போய் எளிமையாக நடந்துகொள்ளக் கூட முயற்சி செய்யலாம்.

மூன்றாவதாக, நம் வளர்ச்சியில் உள்ள இடர்பாடுகளைச் சொல்லி, நான் அப்படி ஒன்றும் மகிழ்ச்சியாக இல்லை ; எனக்கும் பல புதுப் பிரச்சினைகள் உருவாகி உள்ளன என்பதை, வெளிப்படுத்த வேண்டும்.

நான்காவதாக, நாம் அடைந்து வரும் நன்மைகளில் மிகச் சிறு சதவிகிதத்தையேனும் இவர்களுள் அடையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த நான்கையும் சரிவரச் செய்து வந்தால் நம்மைப் பார்த்துப் பொறாமைப்பட்டவர்கள் எல்லோரும் நம் அணியில் சேர்ந்து கொண்டு நம் புகழ் பாடும் தொண்டர்களாக ஆகிவிடுவது நிச்சயம்!

லேனா தமிழ்வாணன்

# புதிய அரசியலமைப்பு குறித்து மக்கள் மத்தியில் அச்சநிலை!

## சரியான தீர்வை நோக்கி தமிழ்த் தலைமை செல்ல வேண்டுமென சுரேஷ் சுட்டிக்காட்டு



புதிய அரசியலமைப்பு தொடர்பாக தற்பொழுது மக்கள் மத்தியில் அச்ச சூழ்நிலையே உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்த நிலையில் எமக்கான சரியான தீர்வை நோக்கி போக வேண்டிய தேவை தமிழ்த் தலைமைகளுக்கு உண்டு எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், உத்தேச அரசியலமைப்பு முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு மற்றும் பிரகடன வெளியீடு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசியல் சாசனம் வருமா? வராதா? என்ற கேள்வி அனைத்து தரப்பினர் மத்தியிலும் நிலவிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் தற்போது இருக்கும் அரசியல் யாப்பு ஒற்றையாட்சி முறையை கொண்ட ஒரு யாப்பு. இந்த புதிய அரசியல் சாசனம் எவ்வாறு இருக்கப் போகிறது என்பதுதான் தற்போதைய கேள்வி.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் என்னவென்றால் வடக்கு-கிழக்கு என்பது இணைக்கப்பட வேண்டும், தமிழர்களுடைய தாயகமாக இருக்கவேண்டும், தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், எம் மக்களுக்கு, உரித்தான இறையாண்மை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதன் அடிப்படையில் வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களுக்கு ஒரு சுய ஆட்சி உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாக இருந்தால் பழைய அரசியல் சாசனம் தலை குத்துக்கரணமான மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

தமிழ்மக்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை உள்ளடக்கும் வகையில் இந்த அரசியல் சாசனம் இருக்க வேண்டுமாக இருந்தால் அரசியல் சாசனத்தில் பல பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் சர்வதேசத்திடம் மிக தெளிவாக விளக்கி இருப்பதாக தமிழ் தலைமைகள் கூறுகின்றன. அதே தெளிவான கருத்தை இலங்கை அரசிடம் தமிழ் தலைமைகள் பேசியுள்ளார்களா?

இலங்கை அரசாங்கம் அரசியல் சாசனத்தை உருவாக்குவதற்கு முன்பாகவோ? அல்லது இந்த அரசியல் சாசனத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலோ? இலங்கை அரசாங்கத்திடம் தமிழ்த்தலைமைகள் இந்த விடயங்களை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் பேசியுள்ளார்களா?

வடக்கு- கிழக்கு இணைப்பு என்ற விடயத்தை பார்க்கும் பொழுது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இது தொடர்பாக தம்மிடம் தமிழ்த்தலைமைகள் யாரும் பேசவில்லை எனத் தெரிவிக்கிறார்கள். இதேபோன்று சமஷ்டி அரசியலமைப்பு பற்றிப் பேசுகின்ற போது ஒற்றையாட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறது என தெரிவிக்கிறார்கள்.

ஆகவே இந்த முரண்பாடுகளை நாங்கள் பார்க்கும் பொழுது, அரசியல் சாசனம் சபை உருவாக்கப்பட்டிருக்கின்றது. அந்த அரசியல் சாசன சபையின் வழிகாட்டல் குழு இருக்கிறது. ஆறு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இலங்கை முழுவதும் அரசியல் சாசனம் இவ்வாறு உருவாக வேண்டும் என்ற கருத்தை ஒரு குழு பெற்றுள்ளது. ஆனால் அவர்களின் கருத்துக்கள் அனைத்தும் இந்த இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? என்பது பிரதான கேள்வி.

வடக்கு மாகாண சபை, தமிழ் மக்கள் பேரவை அரசியல் சாசன தீர்வு திட்ட வரைபை வழங்கியுள்ளது. அதில் தெரிவித்துள்ள விடயங்கள் அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமென வழிகாட்டல் குழுவில் பேசப்பட்டதா? அவை எதுவும் நடந்ததாக தெரியவில்லை.

ஒரு தீர்வுத் திட்டத்தை அரசியல் தலைமைகளே ஆய்வுக்கு உட்படுத்த வில்லை என்றால் அரசாங்கம் ஆய்வுக்குட்படுத்துமா? என்பது சாதாரண கேள்வி. ஆனால் அவ்வாறான விடயம் வழிகாட்டல் குழுவில் இருப்பவர்களால் அல்லது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமைகளால் கூட ஆய்வுக்கு எடுக்கப்படவில்லை.

தற்போது எமக்கு கூறப்படும் விடயம் என்னவென்றால் அமைதியாக இருங்கள் குழப்பாதீர்கள் என்பதே.

யுத்தம் முடிந்ததற்கு பின்னர் ஒரு சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும். அந்த நடவடிக்கையின் பின் இந்த அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறும் நடைபெறவில்லை. நாம் தற்போது கேட்பது அரசாங்கத்துடன் ஒரு முழுமையான அடிப்படை விடயங்களை மையமாக வைத்து பேச்சுவார்த்தையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஈடுபட வேண்டும். இவ்வாறான பேச்சுவார்த்தைகள் வெளிப்படையாக நடந்ததாக இல்லை.

ஒற்றையாட்சியாக இருக்கும் பட்சத்தில் அதிகாரப்பகிர்வு சாத்தியமற்ற விடயம். மிகவும் ஒரு ஏமாற்றுத்தனமான முறையில் இந்த அரசியல் சாசனம் தயாரிக்கப்படுவதாக எமக்கு தோன்றுகின்றது. அரசை பொறுத்தவரை சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை எவ்வாறு நிறுவுவது என்ற அடிப்படையில்தான் இந்த அரசியல் சாசனம் உருவாக்கப்படுகிறது.

ஆயுதங்களுடன் இருந்து அரசுக்கு எதிராக போராடினால் அப்போது அரசு வைத்திருக்கும் தீர்வு வேறு, ஜனநாயக வழியில் போராடினால் அவர்கள் வைத்திருக்கும் தீர்வு வேறு. எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் அரசுக்கு இருந்த மனோநிலை தற்போது முற்றுமுழுதாக மாறியுள்ளது. இந்த நிலையில் எமது அரசியல் தலைமைகள் எவ்வாறு நடந்துகொள்கின்றன என்பது தான் கேள்வி.

நாங்கள் இறுதிவரை முயற்சி செய்வோம். அந்த முயற்சி தோல்வியடைந்தால் மக்களிடம் சொல்வோம் என தெரிவிக்கிறார்கள். அந்த முயற்சி தோல்வி அடையாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என சிந்திப்பதாக தெரியவில்லை.

அரசுடன் திட்டவட்டமாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அவ்வாறான பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தால், தொடர்ந்து இந்த அரசியலமைப்பு குழுவில் இருப்பதா? இல்லையா? என்ற தீர்மானத்திற்கு வந்திருக்க முடியும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன வேண்டும் என சர்வதேசத்துடன் எழுத்து மூலமான அறிக்கைகள் எவையும் வழங்கப்படவில்லை. வடக்கு மாகாண சபை மற்றும் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தை தவிர வேறு எவையும் சர்வதேசத்திடம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கை அரசுடன் பேசுகிறதா? நாங்கள் சர்வதேச சமூகத்துடன் விளக்கமாக பேசாமல் சர்வதேச சமூகம் அரசுடன் பேசுமா? என்ற பல கேள்விகள் எழுந்துள்ளன.

தற்போதைய சூழ்நிலை தமிழ் மக்களை ஒரு கலவரச் சூழலுக்குள் அதாவது எங்கு போய் முடியப்போகிறதோ என்ற அச்ச சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் இலட்சக்கணக்கான உயிர்களை இழந்திருக்கும் பின் எமக்கான ஒரு அரசியல் தீர்வை நோக்கிப் போக வேண்டியது தேவை உள்ளது.

தமிழ் மக்களுக்கு ஒரு பாரிய கடமை உள்ளது. நாங்கள் ஆயுதப் போராட்டத்தில் சில சமயம் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்கள் இந்த நாட்டில் கௌரவமாக வாழ வேண்டிய சூழல் உருவாக வேண்டும் என்பதற்காக நாங்கள் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ரோஹிஞ்யா முஸ்லிம்கள் படுகொலை! கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

மியன்மாரில், ரோஹிஞ்யா முஸ்லிம்கள் படுகொலை தொடர்பான விசேட கண்டனத் தீர்மானம், கிழக்கு மாகாண சபையில், நேற்று நிறை வேற்றப்பட்டது. மாகாண சபை அமர்வு, முற்பகல் 10 மணியளவில், அவைத் தலைவர் கலப்பதி தலைமையில் கூடியபோது, இதற்கான விசேட பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை சமர்ப்பித்தார்.

இதனை வழிமொழிந்து உறுப்பினர் ஆர்.அன்வர் உரையாற்றினார். இந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், விவாதமின்றி, பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்டவர்களுக்கு அனுப்பிவைப்பதாக அவைத் தலைவர் சபையில் அறிவித்தார்.

மியன்மார் பிரதேசத்தில், ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதனைத் தடுக்க ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புக்களுக்கு இத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் அனுப்ப வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். (இ-7)

## தென்னாபிரிக்க விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் இலங்கை விஜயம்

தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத்தின் செயற்பாட்டாளர், மைக்கல் லெப்ஸ்லி இலங்கையில் மலையக மக்களுடன் தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக ஹற்றன் பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை 33/2 டன்பார் வீதி, ஹற்றனில் அமைந்துள்ள CWE மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மைக்கல் லெப்ஸ்லி நியூசிலாந்து நாட்டை சேர்ந்தவர். தனது இறைபணியின் மேலதிக கற்கைக்காக தென்னாபிரிக்க நாட்டுக்கு அனுப்பப்பட்டார். அக் காலத்தில் தென்னாபிரிக்காவில் நிறபேத கொடூரத்துக்கு எதிராகவும் ஒடுக்கப்பட்ட கறுப்பின மக்களுக்காகவும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கியவர்.

நிறபேதத்துக்கு எதிராக செயற்பட்டதால், வெள்ளையர்களால் அவரை கொல்வதற்காக பார்சல் குண்டு அனுப்பப்பட்டது. இந்த பார்சல் குண்டு வெடிப்பில் இவர் உயிர் தப்பினாலும் அவரின் இரண்டு கைகளையும் ஒரு கண்ணையும் இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்த ஆண்டில் தேர்தல் நடக்க வாய்ப்பில்லை

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

இந்த ஆண்டில் தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியமில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசாங்கம் தேர்தலை நடத்த அஞ்சுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவை வெலிக்கடை சிறைச்சாலையில் பார்வையிடச் சென்றிருந்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கம் தோல்வியைத் தழுவும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)



இளவாலை பிரதேச வைத்தியசாலையில் இளவாலை மக்கள் ஒன்றிய ஐக்கிய இராச்சியத்தின் நிதி அனுசரணையில் பற் சிகிச்சைக்கான புதிய கட்டடம் மற்றும் வடக்கு மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட புதிய வைத்தியர் விடுதி திறப்பு விழா கடந்த 4ஆம் திகதி வைத்திய அதிகாரி ந.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்: -இளவாலைச் செய்தியாளர்)

# குமாரபுரம் படுகொலை -மேன்முறையீட்டு மனு தொடர்பான எழுத்து மூல சமர்ப்பிப்பு டிசெம்பரில்

(கொழும்பு)

திருகோணமலை, குமாரபுரத்தில், 26 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில், அநுராதபுரம் மேல் நீதிமன்ற ஜூரிகள் சபையால் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டுமனு தொடர்பான எழுத்து மூல சமர்ப்பிப்புகளுக்கான தினமாக, டிசெம்பர் 13ஆம் திகதியை, மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று முன்தினம் நிர்ணயித்துள்ளது.

படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 இராணுவத்தினரும் குற்றமற்றவர்கள் என்று, சிங்கள ஜூரி சபையால் தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய, 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி அவர்கள் அறுவரையும் அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுவிப்பதாக, அநுராதபுரம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சவுசிரிகெதர நிஷாந்த, என்.எம்.அஜித் சிசிர குமார, எம்.பி.கபில தர்ஷன, எச்.எம். அபேசிங்க, பவரம் ஜேடிகே உபசேன, ஹிட்டி பண்டார அபேசிங்ககே ஹிட்டி பண்டார ஆகியோரே விடுவிக்கப்பட்டனர்.

ஜூரிகள் சபையின் இந்தத் தீர்ப்புக்கு எதிராக, சட்டமா அதிபரால், மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. பிரதிவாதிகள், குற்றம் செய் துன்னமை வாதங்களின் போது சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்படப்பட்டுள்ள போதும், அநுராதபுரம் மேல் நீதிமன்ற ஜூரிகள் சபை, அவர்கள் குற்றமற்றவர்கள் என, தீர்மானித் துள்ளது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதியரசர்களான தேவிகா தென்னகோன், எஸ்.துரைராஜா ஆகியோரடங்கிய அமர்வு முன்னிலையில், மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திருகோணமலை, தெஹியத்த இராணுவ முகாமில், குறித்த இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டிருந்த போது, 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றில், மூதூர் - கிளிவெட்டி குமாரபுரத்தில் இந்தப் படுகொலையை மேற்கொண்டுள்ளனர் என, அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. 20 வருடங்களுக்கு முன்பு, இரவு வேளையில், இடம்பெற்ற இந்த படுகொலைச் சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், 25 பேர் காயமடைந்தனர்.

இந்தப் படுகொலை வழக்கில் தெஹியத்த இராணுவ முகாமில் சேவையிலிருந்த 8 இராணுவ வீரர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இதில், இருவர், வழக்கு இடம் பெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே உயிரிழந்து விட்டனர். 1996ஆம் ஆண்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் குறித்த அவர்கள், சாட்சிகளினால் அடையாளம் காணப்பட்ட நிலையில், திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு வழக்கு மாற்றப்பட்டிருந்தது.

அன்றைய யுத்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு பிரதிவாதிகளின் வேண்டுகோளின் பேரில், பாதுகாப்புக் கருதி சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய, இந்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. பின்னர், பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கமைய சிங்கள ஜூரி சபையின் முன்னிலையில் வழக்கு விசாரணை இடம்பெற்று, 2016 ஜூலை மாதம் 27ஆம் திகதி, இராணுவத்தினர் அறுவரும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய்களுக்கு தொடர்ந்து மறியல்

ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய்கள் இருவரையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் கம்பஹா பிரதான நீதவான் டீ.ஏ. ருவன் பத்திரன மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவத்தில் பிணை வழங்கப்பட்டுள்ள பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்தன மற்றும் லலித் க்ரே ஆகியோர் நவம்பர் முதலாம் திகதி நீதிமன்றம் முன்னிலையில் ஆஜராக வேண்டும் என உத்தர விடப்பட்டுள்ளது. (இ-7)



# நினைவு நாளும் நினைவுப் பேருரையும்

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவுநாளும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக செல்லா மண்டபத்தில் இடம்பெற்றவுள்ளது. வாழ்வக தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் பல் வைத்திய நிபுணர், வைத்திய கலாநிதி அ.சுரேஸ், யாழ்ப்பாணம் கார்கில்ஸ் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ப.பிரகாஷ், கொக்குவில் டெய்லி பூட்சிற்றியின் உரிமையாளர் சி.யோகபாலன், வாழ்வக பழைய மாணவியும் மன்னார் மறத்தி கன்னாட்டி றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியருமான செல்வி. செ. பெனடிக்றா, வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் வி.விஸ்ணுகுரன், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான மு. செல்வக்குமார், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் நினைவுப் பேருரையாளராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# வாழ்வாதார உதவி வழங்கல்



குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தால் இத்தாலி வாழ் புலம்பெயர் உறவுகளின் நிதி அனுசரணையில் வறுமைக் கோட்டின் கீழுள்ளவர்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு குருநகர் சனசமூக நிலையத்தில் குருநகர் மக்கள் முன்னேற்றஒன்றியத்தின் தலைவர் ஞானப்பிரகாசம் ஜோயின் அன்ரனி தலைமையில் நடைபெற்றது. (இ-126)

# மாகாண கைத்தொழில் கண்காட்சி நாளை நெல்லியடியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கைத்தறி மற்றும் கைவினைஞர் பொருட்களை உற்பத்தி செய்யும் வட மாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வட மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் புடைவைக் கைத்தொழில் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் மாகாணக் கைத்தொழில் கண்காட்சி நாளை 9ஆம் திகதி சனிக்கிழமை முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மூன்று தினங்கள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்கள் எம்.கே. சிவாஜிலிங்கம், கே.ரி.லிங்கநாதன் மற்றும் தேசிய கைப்பணிச் சபையின் தலைவர் செல்வி கேஷானனி போகொல்லாகம ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இக்கண்காட்சியை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-13)

# புதுமை மாதா ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். தினமும் மாலை 5.30 மணிக்கு நவநாள் வழிபாடு இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருப்பலியும் நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும். (இ)

# கந்தபுராண தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கதிர் கலை பகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் கொழும்புத்துறை இலந்தைப்புலம் வதரிபீட விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.இராஜராஜேஸ்வர சர்மா தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் சுழிபுரம் க.லோகேஸ்வரன் பஜனைக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வும் சொல்வேந்தர் பொன்.சுகந்தன் வழங்கும் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்வும் இடம்பெறும். (இ)

# ஆட்கடத்தலை தடுக்கும் உடன்பாட்டில் இலங்கை- அவுஸ்திரேலியா கைச்சாத்து

(சிட்னி)

ஆட்கடத்தலுக்கு எதிரான நடவடிக்கையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையிலான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில், அவுஸ்திரேலியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.

கன்பராவில், நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், அவுஸ்திரேலியாவின் சார்பில் குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு திணைக்களத்தின் செயலர் மைக்கேல் பெசுலோவும், இலங்கையின் தரப்பில் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.



ஆட்கடத்தல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நபர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கும், ஆட்கடத்தல் முறைகள் பற்றிய தகவல்களை பரிமாறிக் கொள்ளவும், இடைமறித்தல் மற்றும் ஆட்கடத்தல்காரர்களை விசாரணை செய்வதற்கும், இந்த உடன்பாடு வழிசெய்கிறது.

ஆட்கடத்தலை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அதிகாரிகளுக்கு அவுஸ்திரேலியா பயிற்சிகளை அளித்து அவர்களின் திறனை பலப்படுத்தவும் இந்த உடன்பாடு வழி செய்கிறது. (இ-7)



# பேர்பெச்சுவல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுனுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான கசுன் பலிசேனவுக்கு, விசேட பாதுகாப்பை வழங்குமாறு, திறைசேரி முறிகளை வழங்குதல், தொடர்பாகப் பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, நேற்று முன்தினம் கட்டளையிட்டது.

பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறான மட்டங்களைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டமையை அடுத்து ஏற்பட்டுள்ள அழுத்தங்களை தவிர்த்து, பாதுகாப்பை மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே மேற்கண்டவாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் தரப்பில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொட விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே, ஆணைக்குழு மேற்கண்டவாறு கட்டளையிட்டுள்ளது.

மத்திய வங்கியின் நிதிச் சபையிலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் சமன் குமாரவினுடையதும் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் அதிகாரியினுடையதும் ஏலத்தில் விடப்பட்டமை தொடர்பில், அலோசியஸுக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும் அந்த சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியின் ஆளுநராக, அலோசியஸின் மாமனாரான அர்ஜுன மகேந்திரன் பதவியிலிருந்தார் என்று யசந்த கோதாகொட, ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மத்திய வங்கியின் உயர் பதவியிலிருந்த நபரொருவர், நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸுக்கு கிடைத்த தகவலை அடிப்படையாக வைத்து, பிணை முறிக்காக ஏலத்தை முன்னெடுத்ததன் மூலம், 11 மில்லியன் ரூபாய்க்கு மேல் இலாபமாக திரட்டியது' என்று, பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான கசுன் பலிசேன, ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1184

Search for people, places and things Nagendram Home

காயத்திரி




சுலோசன்




நிருபன்




கபிலன்




வானுசன்




வாமதேவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## தப்பித்த சிநேகன்



பிக்போஸ் நிகழ்ச்சியில் கடந்த வாரம் வையாபுரி. காஜல் மற்றும் சிநேகன் ஆகியோர் எலிமினேட் லிஸ்டில் வந்தனர். இதில் குறைந்த வாக்குகளை பெற்ற காஜல் வெளியேற்றப்பட்டார்.

வெளியேறிய பின்னர் பிக்போஸ் நிகழ்ச்சி குறித்து காஜல் செய்தியாளர்களிடம் பேசியபோது.பிக்போஸ் நிகழ்ச்சியில் ஸ்கிரிப்ட் எல்லாம் எதுவும் இல்லை. எல்லாம் உண்மையாக நடப்பவைதான். ரசிகர்களாகிய உங்களை எல்லாம் நான் தப்பாக கணக்கு போட்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.

ஆனால் முதுகுக்கு பின்னால் புறம் பேசும் சிநேகன் தான் என் டார்க்கெட்டாக இருந்தது. ஆனால் அவருக்கு என்னிடம் நேரில் பேசும் சக்தி இல்லாததால் என்னிடம் இருந்து அவர் தப்பி விட்டார் என்றார்.

## வையாபுரியின் கதறல்



சினிமா நட்சத்திரங்கள் முக்கியமானவர்கள் என மக்களின் கவனத்தை ஈர்த்தவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியான பிக்போஸ் 60 நாட்களை கடந்துவிட்டது. ஏற்கனவே வெளியேறியவர்கள் போக உள்ளே இப்போது 9 பேர் இருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான போட்டிகள் வந்து போகிறது. புதிதாக உள்ளே ஒரு பெண் பார்வையாளர் போல உள்ளே நுழைகிறார். வையாபுரியின் பின்னே நின்று பேசுகிறார்.

வந்தவர் யார் என அனைவரும் பார்க்க ஆனந்தி நீங்கள் போகலாம் என்ற பிக்போஸ் குரல் ஒலிக்கிறது. அவர் வெளியேற வையாபுரி என் பொண்டாட்டி என் பொண்டாட்டி என கத்துகிறார்.

## இன்ப அதிர்ச்சி



பிக்போஸ் நிகழ்ச்சி தற்போது கடைசி கட்டத்தை எட்டி வருகிறது. அதே போல் யாரும் எதிர்பாராத நேரத்தில் பிந்துவின் நீண்ட கால நண்பர்கள் இரண்டு பேர் வந்து பிந்து வுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தனர்.

இதை சற்றும் எதிர்பாராத பிந்து ஆனந்த கண்ணீரில் மிதந்தார் . வரும் நாட்களில் நீண்ட நாட்களாக உள்ள போட்டியாளர்களுக்கு இது போல் பல இன்ப அதிர்ச்சி காத்திருக்கிறது.

## ஜூலியின் வேண்டுதல்

பிக்போஸ் நிகழ்ச்சியில் வையாபுரி, ஹரிஷ், பிந்து போன்றவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தாலும் கஷ்டமான டாஸ்க்கையும் அதே சமயம் பிக்போஸ் கொடுத்தார்.

அதாவது வீட்டில் இருக்கும் 10 பேர் இரண்டு அணிகளாக பிரிந்து இரண்டு பேரை போட்டிக்கு தேர்ந்து எடுக்க வேண்டும்.

டாஸ்க் என்னவென்றால் வீட்டின் வெளிப்புறத்தில் இரண்டு நாற்காலிகள் வைக்கப்பட்டிருக்கும். இரண்டு அணிகளில் தேர்ந்து எடுக்கப்பட்ட இரண்டு நபர்களை அதில் உட்கார வேண்டும்.

மற்ற போட்டியாளர்கள் வீட்டில் உள்ள அனைத்து குப்பைகள் . மூட்டைகள் . பச்சை தண்ணி , மாவு போன்றவத்தை அவர்கள் மேல் போட்டு எப்படியாவது ஒருத்தரை அந்த நாற்காலியில் இருந்து எழும்ப வைக்க வேண்டும்.

இந்த போட்டியில் ஆர்த்தியும் . கணேஸும் கலந்து கொண்டனர். எல்லாவற்றையும் போட்டும் அவர்கள் கடைசிவரை எழும்பவில்லை அதுமட்டுமில்லாமல் இடியுடன் கூடிய பலத்த மழையும் பெய்ய தொடங்கியது.

இதனால் வீட்டில் உள்ள மற்றவர்கள் பதற தொடங்கினர் . ஜூலி மட்டும் தனியாக சென்று எப்படியாவது இந்த டாஸ்க்கில் இவர்களை காப்பற்று மா என்று முட்டிபோட்டு மாதாவிடம் ஜெபித்தார் .

கடைசியில் வீட்டில் உள்ளவர்கள் பலர் கெஞ்சி கேட்ட பின் இரண்டு பேரும் ஒரே நேரத்தில் எழுந்து டாஸ்கை முடித்தனர்.

## ஜூலிக்கு செருப்படி



பிக்போஸ் நிகழ்ச்சியில் போட்டியாளர்களுக்கு விருது வழாங்கப்பட்டது. அதன்படி சுஜா வருணிக்கு நாடகக்காரி விருதை ஜூலி வழாங்கினார்.

இதனை வாங்கும்போது சுஜா வருணி ஒரு பெரிய நாடகக்காரியிடம் இருந்து இந்த விருதை வாங்குகிறேன் என்று முகத்தில் அடித்தாற்போல பதிலடி கொடுத்தார்.

இதனை சற்றும் எதிர்பாராத ஜூலி அதிர்ச்சி அடைந்தார். மேலும் ஜூலியிடமே என்னை பார்த்தால் நாடகக்காரி போல இருக்கிறதா என நேரிடையாக கேட்டார். அதற்கு பிக்பாஸ்தான் போலி என்று ஒரு விருது வழுங்க சொன்னார்கள்.

ஆனால் நான்தான் நாடகக்காரி என்று டீசன்டாக மாற்றி கொடுத்தேன். உன்னை பற்றி வெளியில் பேசுவதை பார்த்துதான் இந்து விருது வழுங்கப்பட்டது என்றார்.

மேலும் ஆவேசம் அடங்காதவராக சுஜா. டைனிங் ஹாலில் உட்கார்ந்து பேசும்போது, நான் வீட்டில் இப்படித்தான் இருப்பேன்.

அதுபோலத்தான் இருக்கிறேன். நான் நடிக்கிறேன் என்று யாராவது நினைத்தால் உடனே என்னை விட்டு விலகி விடுங்கள். நான் இதுவரை நடிக்கவில்லை. நடிக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் நான் ரெடி.

இந்த நிமிடமே நடிக்க தயார் என்று சவால் விட்டார். இதனை கேட்ட ஆர்த்தி உள்பட மற்றவர்கள் சுஜாவை சமாதானம் செய்தனர்.

## பிக்போஸ் வீட்டில் தேம்பி தேம்பி அழுத போட்டியாளர்கள்

இரவு 9 மணி என்றாலே பலரும் பிக்போஸ் நிகழ்ச்சி பார்க்க ஆவலாகி விடுகின்றனர். நிகழ்ச்சியில் ஒவ்வொரு நாளும் சில சுவாரஸ்ய விஷயங்கள் நடக்கிறது. இந்த நிலையில் பிக்போஸ் வீட்டில் இருக்கும் அனைவரும் தேம்பி தேம்பி அழுகின்றனர்.

ஆனால் அவர்கள் எதற்காக இப்படி அழுகிறார்கள் என்பது தெரியவில்லை. ஒரு வேளை சிநேகன் அவர்களின் உறவினர்கள் வருகையால் இப்படி ஒரு சோகமா வீட்டில் என்று ரசிகர்கள் குழம்பியுள்ளனர்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 02.09.2017-04.10.2018



மகத்தான வாழ்க்கை அமைய மனதில் உறுதி வேண்டுமென்று சொல்லும் துலாம் இராசி அன்பர்களே!

உங்கள் இராசிக்கு 3ஆம் இடமான சகோதர ஸ்தானத்திற்கும் 6ஆம் இடமான சத்ரு ரோக ஸ்தானத்திற்கும் உரியவர் குருபகவான். இதுவரை 12ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த அவர், உங்களின் ஜென்ம இராசிக்கு பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிக்கு அதிபதி சுக்ரனாவார். அவர் குருபகவானுக்கு பகை கிரகமாக இருப்பதால், துலாம் இராசி என்பது குரு பகவானுக்கு பகை வீடாகும். உங்கள் வீட்டிற்கு ஒரு பகைவன் வந்தாலும் அவரை வரவேற்று உபசரிப்பதுதான் பண்பாடு. அங்ஙனம் நாம் எதிரியை வரவேற்று கொண்டாடினால், அவர் மனம் குளிர்ந்து நன்மைகளை நமக்குச் செய்யத் தொடங்குவார்.

அந்த வகையில் குருவை வழிபட்டால் நன்மையும், வெற்றியும் வந்து சேரும். அதேநேரத்தில் குரு பகவான் இருக்குமிடத்தை வைத்து மட்டும் நாம் பார்க்கக் கூடாது. அவர் பார்க்கும் இடமெல்லாம் பலன்கள் ஏராளமாக கிடைக்கும். குருவைப் பொறுத்தவரை ஸ்தான பலத்தை விட, பார்வை பலமே மிகமிக அதிகம். அந்த வகையில் குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன.

மாங்கல ஓசை கேட்கவும், மழலையின் ஓசை கேட்கவும், தங்கு தடைகள் அகலவும், தாராளமாக செலவு செய்யவும் இந்த குருப்பெயர்ச்சி முழுமையான ஒத்துழைப்பு தரப்போகிறது. எனவே இனி உங்கள் இல்லத்தில் அதிர்ஷ்ட தேவதை குடியேறப் போகிறாள். நற்செய்தியை சுமந்து கொண்டு நாளும் நண்பர்கள் வருவார்கள். உங்களின் தேகம் திடமாகும். செயற்பாட்டில் வெற்றி கிட்டும். பாகப்பிரிவினைகள் எதிர்பார்த்ததுபோல் நடைபெறும்.

குருவின் பெயர்ச்சியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் உங்கள் இராசிக்கு மற்ற இடங்களில் இருக்கும் கிரகங்கள் சஞ்சாரப்படி இருக்கும் நிலைமையும் சுயஜாதகத்தில் நடக்கும் திசா புத்தி நன்மை தருமா? என்பதை ஆராய்ந்து அதற்குரிய சிறப்பு பரிகாரங்களையும் செய்யவேண்டும். வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருபகவானை வழிபட்டு வந்தால் வெற்றிக் கொடி வீட்டில் பறக்கும்.

### குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி

குருப்பெயர்ச்சிக்கு முன்பு இராகு- கேது பெயர்ச்சியாகி உள்ளது. உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் கேதுவும், 10ஆம் இடத்தில் இராகுவும் சஞ்சரிக்கிறார்கள். சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கிய பாதிப்புகள் அடிக்கடி உருவாகலாம். அதன் பிறகு இந்த வருட கடைசியில் அதாவது 19.12.2017 அன்று உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் 3ஆம் இடமான தனுசு இராசிக்கு செல்லப்போகிறார். எனவே ஏழரைச் சனி விலகப்போகிறது. அந்த சமயத்தில் நீங்கள் விரும்பிய ஸ்தலங்களுக்குச் சென்று சனிபகவானை வழிபடுவதோடு திருநள்ளாறு, குச்சனூர், நல்லிப்பட்டி, பெரிச்சிக்கோவில் போன்ற சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வரலாம்.

ஜென்மத்தில் குருவும் வந்தால்
செலவுகள் கூடும் என்பார்
பொன், பொருள் விரயமாகும்
பொழுதெல்லாம்
பயணம் வாய்க்கும்
இன்பங்கள் வந்து சேர
எடுத்த செயல் வெற்றியாக
நம்பிடும் குருவை நீங்கள்
நாள்தோறும் துதிக்க வேண்டும்!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.
அந்த அடிப்படையில்தான் நாம் பலன்களை அறிந்து கொள்ள வேண்டும்.

## உழைப்பால் வரும் பெரும் வரவு!

'ஜென்ம ராமர் வனத்திலே' என்று ஒரு பாடல் உண்டு. ஆனால் ஜென்மத்தில் குரு வருகின்ற பொழுது எல்லோரும் வனவாசம் செல்வதில்லை. அவரவர்கள் திசா புத்திக்கு ஏற்ப, சுழலும் கிரகங்களுக்கு ஏற்ப பலன்களும் மாறுபடுகின்றன. உழைப்பு அதிகரிக்கும் நேரமிது. உயர்மட்ட அதிகாரிகளின் பகை மாறும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். வீடு மாற்றங்களும் நாடு மாற்றங்களும் தானாக வந்து சேரும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அலைச்சல் கூடும்.

விரயங்களைச் சுப விரயங்களாக மாற்றிக் கொள்ள நினைப்பவர்கள் வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கலாம். குழந்தைகளின் எதிர்கால நலன் க்ருதி வங்கிகளில் வைப்புநிதி வைக்கலாம். கட்டிய வீட்டை பழுது பார்ப்பதில் இருந்த தடைகள் அகலும். தோட்டம் துரவுகள் வாங்கும் எண்ணம் மேலோங்கும். சந்தர்ப்பங்கள் எல்லாம் சாதகமாக்கிக் கொள்ள உங்கள் புத்திசாலித்தனம் தேவைப்படும் நேரமிது.


### குரு பார்வை கொடுக்கும் பலன்கள்

பார்க்கும் குருவால் உங்களுக்கு பலன்கள் அதிகம் கிடைக்கும் என்பதால், அந்த ஸ்தானங்களையும் அதன் ஆதிபத்யங்களையும் உணர்ந்து செயற்படுவது நல்லது. குரு பார்க்கும் 5,7,9 ஆகிய மூன்று பார்வைகளும் முக்கியமான பார்வைகளாகும்.

'ஐந்தினைக் குருதான் பார்த்தால் அனைத்திலும் வெற்றி கிட்டும். வந்திடும் துயர் விலக்கி வாரிசும் கிடைக்க வைக்கும்' என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. பிள்ளைச் செல்வம் இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, அந்த கவலை நீங்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பூர்வீகச் சொத்துகளைப் பிரித்து பாகப்பிரிவினை செய்து கொள்வதில் இருந்த தடைகள் அகலும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த உயர்வுகளும், இலாகா மாற்றங்களும் வந்து சேரலாம். சொந்த பந்தங்கள் பகையை மறந்து செயற்படத் தொடங்குவர்.

'ஏழினை குருதான் பார்த்தால் இல்லறம் சிறப்பாய் அமையும்' என்கிறது ஜோதிடம். அந்த அடிப்படையில் உங்களுக்கு ஏழாம் இடமான மேஷ இராசியை குரு பார்ப்பதால் கல்யாண கனவுகள் நனவாகும். கடல்தாண்டிச் செல்லும் முயற்சிகள் கைகூடும். மடல் மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பெற்றோர்களின் மணிவிழா, பவள விழா போன்ற விழாக்களும், பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளும் நடைபெறும். யாரோ செய்த தவறுக்காக உங்கள் மீது சுமத்தப்பட்ட வீண் பழி அகலும். நீண்ட காலமாக உங்கள் சகோதரர்கள் வெளிநாடு செல்ல எடுத்த முயற்சி கைகூடவில்லையே என்ற ஆதங்கம் தீரும்.

ஒன்பதைக் குருதான் பார்ப்பதால், பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். குண்டுமணி அளவுகூட தங்கம் இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டும் அளவிற்கு பணப் புழக்கம் வரப்போகிறது. அதுமட்டுமல்லாமல் பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசைகளையும் வாங்கிச் சேர்ப்பீர்கள். பெற்றோர் வழிப் பகை மாறும். பங்காளிகள் பக்கபலமாக இருப்பர். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் அக்கறை காட்டுவீர்கள். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதார வளர்ச்சி கூட வழி வகுத்துக் கொடுப்பர்.




### குருவின் அதிசாரம்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு அதிசாரமாக விருச்சிக இராசிக்குச் செல்கிறார். இக்காலத்தில் உங்கள் இராசிக்கு 2இல் வரும் குரு, உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுப்பார். நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு, வெற்றி கிடைத்து வேலைவாய்ப்பும் வந்து சேரும். ஒரு சிலர் பணியில் நிரந்தரம் பெறுவார்கள். மேலதிகாரிகளின் சலுகைகளோடு மேன்மை காணும் நேரமிது. கட்டடம் கட்டும் முயற்சியில் இருந்த தடைகள் அகலும். அரசு வழி சலுகைகளை எதிர்பார்த்து காத்திருந்தவர்களுக்கு அது கைகூடும். வழக்குகள் சாதகமாக முடியும். மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். விரும்பத்தகாத இடத்திற்கு இடமாற்றம் கிடைத்து சென்றவர்கள், மீண்டும் பழைய இடத்திற்கு திரும்பும் வாய்ப்பு உருவாகும்.

### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இந்த வக்ர காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாக அமையும். தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். தொகை வரவு திருப்தி தரும். பட்டும் படாமலும் பழகிய உறவினர்கள், இப்பொழுது பக்கபலமாக இருப்பர். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நேரமிது. கொடுக்கல் -வாங்கல் ஒழுங்காகும். வருமானம் திருப்தி தரும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும்.

### பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறும் நேரமிது. ஜென்ம குருவாக இருந்தாலும் கூட அதன் பார்வை பலத்தால் பொருளாதார நிலை உயரும். புதிய பாதை புலப்படும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். கடை திறப்பு விழாக்களும் கட்டட திறப்பு விழாக்களும் இல்லத்தில் சுபகாரிய நிகழ்வுகளும் இனிதே நடைபெறும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். விலகியிருந்த உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர்.

சனிப்பெயர்ச்சிக்குப்பிறகு ஏழரைச் சனி முழுமையாக விலகுவதால் திருநள்ளாறு, குச்சனூர், பெரிச்சிக்கோவில் போன்ற ஸ்தலங்களுக்கு சென்று சிறப்பு வழிபாடுகளை செய்வது நல்லது. சுக ஸ்தானத்தில் கேது வீற்றிருப்பதால் ஆரோக்கிய தொல்லை ஏற்படாமலிருக்க கேது பிரீதி செய்வதும் உகந்தது.


### செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் சுக்ரன் என்பதால், வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இல்லத்து பூஜை அறையில் லட்சுமி சமேத நாராயணர் படம் வைத்து அஷ்டலட்சுமி வருகைப் பதிகம் படிப்பது நல்லது. மேலும் சிறப்பு வழிபாடாக சிவகங்கை மாவட்டம், வைரவன்பட்டியில் உள்ள வைரவர், வளரொளிநாதர் வடிவுடையம்மன் ஆகிய தெய்வங்களை யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

## திடீரென தீ பற்றிய மோட்டார் சைக்கிள்






மஸ்கெலியா , சாமிமலை பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று பெனியன் சந்தியில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பயணம் சென்று கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் தீடீரென தீப்பிடிக்க ஓட்டுநர் மோட்டார் சைக்கிளை தள்ளிவிட்டு பாய்ந்துள்ளமையால் அவர் எவ்வித தீக்காயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளார்.

பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து தீயை அணைக்க முயற்சித்தும் சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மஸ்கெலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)




# ஒருவரின் புண்ணியத்தில் வந்தவருக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணையா?

## பொன்சேகா குறித்து மகிந்த கருத்து





(கொழும்பு)

ஒருவரின் புண்ணியத்தால் பாராளுமன்றத்துக்கு வந்த சரத் பொன்சேகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை யாரும் கொண்டு வருவார்கள் என நான் நினைக்கவில்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சரண குணவர்தனவின் சுகதுக்கம் விசாரிக்க மகிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் சிறைச்சாலைக்கு சென்றிருந்தார்.

இதன்போது அமைச்சர் சரத் பொன்சேகாவுக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தால் நீங்கள் அவருக்கு எதிராக வாக்களிப்பீர்களா? என ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்குப் பதிலளிக்கையிலேயே மகிந்த ராஜபக்ஷ எம்.பி. இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 130 | 100 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 280 | 350 | 280 | 300 | 300 | 400 |
| தக்காளி | 120 | 100 | 100 | 180 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 40 | 80 | 130 | 60 |
| கோவா | 100 | 100 | 50 | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 200 | 100 | 200 | 160 | 160 |
| பூசணி | 40 | 50 | 25 | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 120 | 60 | 80 | 120 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 250 | 180 | 180 | 200 | 180 |
| பெரிய வெங்காயம் | 130 | 150 | 110 | 130 | 120 | 160 |
| பாகற்காய் | 180 | 200 | 150 | 200 | 150 | 240 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 50 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 60 | 100 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 80 | 200 | 70 | 160 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 20 | 40 | 80 | 80 | 60 |
| போஞ்சி | 200 | 250 | 140 | 200 | 150 | 120 |
| கத்தரித்தம்புள்ள | 100 | 50 | 120 | 80 | 100 | 120 |
| கீரை -1பிடி | 40 | 20 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 70 | 75 | 50-70 |
| இராசவள்ளி | 300 | 500 | 240 | 400 | 300 | 500 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 80 | 200 | – | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 25 | 60 | 40 | 40 |

## எஸ்.பி.-சுசில் கடும் கருத்து மோதல்; அமைச்சரவைக் கூட்டத்தில் பரபரப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன் தினம் நண்பகல் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்தவுக்கும், எஸ்.பீ. திஸாநாயக்கவுக்கும் இடையில் கடும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இதுபோன்ற நடவடிக்கைகளின் காரணமாக அமைச்சரவைக் கூட்டம் பரபரப்புடன் காணப்பட்டதாக அரசாங்க வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஜனாதிபதி தலையிட்டு இருவருக்கிடையிலான சர்ச்சை தீர்த்து வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

## நாட்டின் நலனை முன்னிட்டே அரசாங்க அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரம்




அரசாங்க அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறை முன்னெடுக்கப்பட்டமை சிறந்த நோக்கத்துடன், நாட்டின் நலனை கருத்தில் கொண்டே என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற உற்பத்தி தொடர்பான வரி விசேட கட்டளைகள் குறித்த விவாதத்தில் இந்த விடயத்தை அவர் தெரிவித்தார். இதேவேளை, நிவாரண அடிப்படையிலான வாகன அனுமதிப்பத்திர முறையினை தாமதித்தாயினும் மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சி அளிப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

தங்களிடம் ஏதோ நலம் இருக்கிறது என்று எண்ணும்படி உன் நண்பர்களை ஆக்கிடு.

- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் அங்காடி வியாபாரத்திற்கு முற்றாகத் தடை!

## மாகாண சபையில் நேற்று பிரேரணை நிறைவேற்றம்

வடக்கு மாகாணத்தில் வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்களின் அங்காடி வியாபாரத்தை தடை செய்யுமாறு வடக்கு மாகாண சபையில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 105 ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலக கட்டடத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது உறுப்பினர் இ.ஜெயசேகரனால் மேற்படி பிரேரணை முன் மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வர்த்தகர்களுக்கு இடையூறாக அவர்களுடைய கடைகளுக்கு அருகாமையிலும் சந்திகளிலும் வீதிகளிலும் வெளி மாவட் டத்தைச் சேர்ந்த அங்காடி வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

மத்திய , மாகாண அரசுகளுக்கு உரிய வரிகளை செலுத்துவதுடன் ஏனைய பல கட்டணங்களையும் செலுத்தி முற்றுமுழுதாக, சட்ட ரீதியாக வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்ற நிரந்தர வர்த்தகர்களின் வாழ் வாதாரத்தை நடைபாதை வர்த்தகம் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. கடந்த கால போரினால் பாதிக்கப்பட்ட எமது வர்த்தகர்கள் எந்தவித நட்ட ஈட்டையோ இலகு கடன் திட்டங்களையோ பெற முடியாத நிலையில் எதிர்நீச்சல் போட்டு பெரும் சிரமத்தின் மத்தியில் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார் கள்.

அவ்வாறிருக்கையில் எந்தவிதமான சட்டரீதியான கட்டுப்பாட்டையும் கொண்டிருக்காத வெளிமாவட்ட அங்காடி வர்த்தகர்களும், இந்திய வர்த்தகர்களும் சுதந்திரமாக தங்கள் வர்த்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

எனவே எமது வர்த்தகர்களையும் எமது பொருளாதாரத்தையும் பாதுகாக்க வெளிமாவட்ட அங்காடி வர்த்தகர்களையும் இந்திய வர்த்தகர்களையும் வட மாகாணத்தில் முற்று முழுதாக தடை செய்ய வேண்டும் என அவர் தனது பிரேரணையை முன்மொழிந்தார். எனினும் இந்தப் பிரேரணை இன பாகுபாடு ரீதியானது என எதிர்க்கட்சி உறுப்பினர் செனவிரத்ன சுட்டிக் காட்டினார்.

எனினும் அதனை மறுத்து ஜெயசேகரன். தென்னிலங்கை வர்த்தகர்கள் இங்கும் தொழிலில் ஈடுபட்டு கொண்டுள்ளனர். எனினும் அங்காடி வியாபாரிகளால் இந்த நிரந்தர வர்த்தகர்கள் பாதிக்கின்றனர். அதனால் தான் இவற்றை தடை செய்யுமாறு கோருகின்றேன் என்றார். இதன் பின்னர் பிரேரணை எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. (இ-4)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்கள மாணவர்களுக்கு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் சிங்கள மாணவர்களுக்கு அன்பு வணக்கம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற இந்த வேளையில் இக்கடிதத்தை எழுத விழைந்தோம்.

எங்கள் நாடு ஒற்றுமையாக – சுபீட்சமாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற ஒரே இலக்கிற்காகவே இந்தக் கடிதம் எழுதப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் நீங்கள் நிச்சயமாக தமிழ் மக்களின் கலை – கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை நன்கு அறிந்திருப்பீர்கள்.

கூடவே உங்களில் பலர் தமிழ் மொழியை பேசவும் கற்றிருப்பீர்கள். இது உங்களுக்கு கிடைத்த ஒரு கொடை எனலாம்.

பொதுவில் தமிழ் மக்களுக்குத் தென்பகுதித் தொடர்புகள் இருந்தமையால் அவர்களில் ஒரு பகுதியினர் சிங்கள மொழியைப் பேசக் கற்றுக் கொண்டனர்.

தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் சிங்கள மக்கள் தமிழ் மொழியையும் கற்றறிந்திருப்பது தொடர்பாடலுக்கும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் பேருதவியாக அமையும்.

எனினும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் தமிழ், சிங்களம் என்ற இரு மொழிக் கற்றலுக்குத் தடையாகவே இருந்துள்ளன.

இருந்தும் கடந்தவை கடந்து போக, சமகால சூழ்நிலையில் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதே புத்திசாலித்தனமாகும்.

அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்த உங்களுக்கு தமிழ் மொழியை பேசுவதற்கான சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது.

இதுதவிர இன்னுமொரு மிகச்சிறந்த சந்தர்ப்பம் உங்களுக்குரியதாகின்றது.

அதாவது தமிழ் மக்கள் படும் அவலங்கள் அவர்களின் இழப்புக்கள் பற்றி தென்பகுதிக்குத் தெரிவிக்கக்கூடிய சந்தர்ப்பம் உங்களுக்கு மட்டுமானது.

நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் அதேநேரம் தமிழ் மக்கள் தொடர்பில் தென்பகுதியில் ஒரு புரிதலை ஏற்படுத்த உங்களுக்கு நிறைந்த சந்தர்ப்பம் உண்டு.

பேரினவாத அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் தொடர்பில் தவறான கருத்துக்களைத் தென்பகுதியில் விதைத்துள்ளனர்.

இதனால் இன்றுவரை தென்பகுதி மக்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகள் மீது அதிருப்தி கொண்டிருப்பதுடன் தமிழ் மக்கள் பௌத்த சிங்களத்துக்கு எதிரானவர்கள் என்ற நினைப்பையும் கொண்டுள்ளனர்.

இத்தகைய நினைப்புகள் இருக்கும் வரை இலங்கைத் தீவு ஒருபோதும் உருப்படமாட்டாது.

எனவே சிங்கள, தமிழ் மக்கள் தொடர்பிலான பரஸ்பர புரிதலை ஏற்படுத்த நீங்கள் நினைப்பீர்களாக இருந்தால், அதனை அமுலாக்க முற்பட்டால் அது இலங்கை மாதாவுக்கும் மக்களுக்கும் நீங்கள் செய்யும் மிக உயர்ந்த கைமாறாகும்.

இதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையை இக்கடித வாயிலாக உங்களுக்குத் தெரியப் படுத்துகின்றோம்.

## மியன்மார் தூதரகம் முன் எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பிலுள்ள மியன்மார் தூதரகம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சிறுபான்மை இனமான ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அங்குள்ள பெரும்பான்மை பௌத்தர்கள் மற்றும் அரச படையினரால் மிலேச்சத்தனமான முறையில்படுகொலை செய்யப்படுகின்றனர்.

இதனைக் கண்டிக்கும் வகையிலும், ரோஹிஞ்யா மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை நிறுத்த வலியுறுத்தும் வகையிலும் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தை காணாமல் போனோரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான குழு ஏற்பாடு செய்திருந்தது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, ஐக்கிய முஸ்லிம் பேரவையின் தலைவர் அஷ்ரப் அலி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

## அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை

(யாழ்ப்பாணம்)

கூட்டுப்பிரார்த்தனையும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் அடியார்களுக்கு கூட்டுப் பிரார்த்தனை பாடப் புத்தகமும் வழங்கவிருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறங்காவல் குழு செயலாளர் த.கஜேந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)


## இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி விபத்து

### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் சந்தியில் எதிரெதிரே வந்த இரண்டு மோட்டார் சைக்கிள் கள் நேருக்குநேர் மோதியதில் கைதடி மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணா மேரிஸ்ரா (வயது-31) என்ற யுவதியும். உரும்பிராயைச் சேர்ந்த சிவசம்பூர் ஜெகதீஸ் (வயது 36) என்ற குடும்பஸ்தரும் படு காயமடைந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகிறனர். (இ-10-30)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### துக்கத்திலிருந்து வெளியே வர ஒரு வழி

நீ மகிழ்ச்சியாக இல்லாவிட்டால் கீழே கொடுக்கப்பட்ட தில் ஏதாவதொன்று அல்லது எல்லாமே உன்னிடத்தில் இல்லையா என்று கண்டுபிடி.

தபஸ் (தவம்). வைராக்கியம் (பற்றற்ற தன்மை). சரணாகதி.

தவம் என்பது இந்தக் கணத்துடன் ஒன்றிப் போவது. மகிழ்ச்சி, மகிழ்ச்சியற்ற நிலைகளை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்வது. வைராக்கியம்- எனக்கு ஒன்றுமே வேண்டாம். நான் ஒன்றுமே இல்லை என்று இருப்பது.

சரணாகதி- நான் இங்கு உனக்காக , உன் மகிழ்ச்சிக்காக இருக்கிறேன் என்று இருப்பது.

நீ குறை கூறிக்கொண்டிருந்தால், மேலே கூறியவை உன்னிடத்தில் இல்லை என்று அர்த்தம். இருக்கின்ற நிலையை நீ அப்படியே ஏற்றுக்கொண்டால் அதைத் தவமாக எடுத்துக் கொண்டால் உன்னால் குறைகூற முடி யாது; நீ பற்றற்ற நிலையிலிருந்து வந்தால் (எனக்கு ஒன் றுமே வேண்டாம்) நீ குறை கூறமாட்டாய். நீ சரணாகதி என்று இருந்தாலும் உன்னால் குற்றம் கூறமுடியாது.

நீ விரும்பிச் செய்யாவிட்டால் பின்னால் நம்பிக்கையில்லா விட்டாலும் நீ செய்வாய். முதலில் ஒன்றுமே என்னால் முடியாது என நீ சொல்வாய். பிறகு கோபத்தாலும் அவநம்பிக்கையாலும் நான் எல்லாவற்றையும் விட்டு விடுகிறேன். எனக்கு ஒன்றும் வேண்டாம். வேறு வழியில்லை போகட்டும் போ என்று நீ சொல்வாய்.

இந்தத் தவம், வைராக்கியம், சரணாகதி மூன்றும் உங்கள் மனத்தைச் சுத்தப்படுத்தும்,உங்களை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கும்.

## தொழிற்சந்தை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் தொழிற் சந்தையும் தொழில் வழிகாட்டலும் இன்றும் நாளையும் என இரு தினங்கள் காலை 9 மணி முதல் 5 மணிவரை கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெறும். (இ-3-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் மானிப்பாய் ஒரு பகுதி, வல்லிபுரம், உடைய கதிர்காமம், புனிதநகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தாண்டிக்குளத்திலிருந்து புளியங்குளம் வரை, ஓமந்தை வீட்டுத் திட்டம், ICT கல்லூரி, Union Alliance Ltd, AMP ஓமந்தை, ICT கல்லூரி, ஓமந்தை மீன் பிடிவலைத் தொழிற்சாலை, வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப் படை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)




### முதியோருக்கு மரியாதை

✦ மனதை அடக்கியாண்டு மறுமைக்குப் பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி. மனம் போன போக்கில் நடந்து, இறைவன் அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள்.

✦ நாவு நேர்மையாக இருக்குமானால், இதயம் நேர்மையான வழியில் செல்ல வேண்டும். நேர்மையற்றதாக இருக்குமானால் இதயம் நேர்மையான வழியில் செல்ல முடியாது.

✦ ஒரு காரியத்தை நீர் செய்ய விரும்பினால் அதன் முடிவை எண்ணிப்பாரும். உம் சிந்தனையில் அதன் முடிவு நல்லதாக இருந்தால் அதைச் செய்வீர். இல்லையேல் அதை விட்டு விடும்.

✦ உனக்காக எதை விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு.

✦ பெருமை என்பது உண்மையை ஏற்க மறுப்பதும், மனிதர்களை இழிவாகக் கருதுவதும் ஆகும்.

✦ ஒருவன், முதியவருக்கு அவருடைய வயதிற்காக மரியாதை செய்தால், வயோதிக நிலையில் அவனுக்கு மரியாதை செய்வோரை இறைவன் ஏற்படுத்துகிறான்.

சிட்டாஹொங் டெஸ்ட் 4ம் நாள்

## சுழலில் லயனும் துடுப்பாட்டத்தில் வோர்னரும் அசத்த

# தொடரை சமன் செய்தது அவுஸ்திரேலியா



லயனின் அசத்தலான சுழல் பந்து கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களால் பங்களாதேஷை வீழ்த்தி தொடரை சமன் செய்தது.

பங்களாதேசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதல் போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றிருந்த நிலையில், 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் சிட்டாஹொங்கில் நடந்தது. முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 305 ஓட்டங்கள் எடுத்தது. நேற்று முன்தினம் மூன்றாம் நாள் முடிவில், அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 377 ஓடடங்களை எடுத்திருந்தது. ஓப் கீ (8) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. லயன் 'டக்' அவுட்டாக, அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸை 377 ஓட்டங்களுடன் முடித்துக் கொண்டது.

### லயன் அபாரம்

இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணிக்கு சௌமியா சர்கார் (5) ஒற்றை இலக்கில் திரும்பினார். லயன் சுழலில் தமிம் (12), இம்ருல் (15), சகிப் (2) உள்ளிட்டோர் சிக்கினர். ஓவ் கீ பந்தில் நாசிர் ஹொசைன் (5) ஆட்டமிழந்தார். அதிகபட்சமாக அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் 31 ஓட்டங்கள் எடுத்தார். முடிவில், பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 157 ஓட்டங்களுக்கு சுருண்டது. அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக லயன் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### எளிய இலக்கு

86 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் அவுஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. வோர்னர் (8), அணித் தலைவர் ஸ்மித் (16) விரைவில் ஆட்டமிழந்தனர். சகிப் பந்தில் ரென்ஷா (22) ஆட்டமிழந்தார்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்கு 87 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. ஹேண்ட்ஸ்கேம்ப் (16), மக்ஸ்வெல் (25) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரு இன்னிங்ஸையும் சேர்த்து மொத்தம 13 விக்கெட் (7,6) வீழ்த்திய லயன் ஆட்ட நாயகன் விருது வென்றார். தொடர் நாயகன் விருதை லயன், வோர்னர் கைப்பற்றினர். 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையானது.

### முதலிடம்

இந்த ஆண்டில் இதுவரை நடந்த டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்களில் லயன் (7 போட்டி, 46 விக்.,) முதலிடம் பிடித்தார். அஷ்வின் (8 போட்டி, 44 விக்.,), ஜடேஜா (7 போட்டி, 44 விக்.,) இரண்டாவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர். தென்னாரிக்காவின் ரபாடா (8 போட்டி, 39 விக்.,) மூன்றாவது இடம் வகிக்கிறார்.

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் இன்று வடமராட்சிக்கு விஜயம்

வடமராட்சிக்கு விஜயம் மேற்கொள்ளும் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் இரண்டு பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு செல்லும் அவர் வகுப்பறைக் கட்டிடம், விடுதி ஆகியவற்றை திறந்து வைப்பதுடன் ஆய்வுகூடம் ஒன்றுக்கான அடிக்கல்லையும் நாட்டி வைப்பார்.

மதியம் 12.00 மணியளவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு செல்லும் அவர் ஆய்வுகூடம் ஒன்றினை திறந்து வைப்பதுடன் வகுப்பறைக் கட்டிடம் ஒன்றுக்கான அடிக்கல்லையும் நாட்டி வைப்பார். (மு-60)

## இரண்டு பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

இளைஞர் ஒருவர் பலியாகக் காரணமாக இருந்ததாக கூறப்படும் இரண்டு பொலிஸ் சந்தேகநபர்களையும் மீண்டும் ஐந்து தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நளினி சுபாகரன் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த 7ஆம் மாதம் 09ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனையடுத்து அன்றைய தினம் கடமைக்குச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (மு-60)


## கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் மாவட்ட பெறுகைக்குழு கமநல அபிவிருத்தித் திணைக்களம் முல்லைத்தீவு சார்பாக உதவி ஆணையாளரால் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் வாய்க்கால் புனரமைப்பு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரியில் 07.09.2017 தொடக்கம் முற்பகல் 9.00 மணியளவில் இருந்து மாலை 3.00 மணிவரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிகதகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 07.09.2017 முதல் 18.09.2017 வரை வேலைநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 18.09.2017ஆம் திகதியன்று பி.ப 02.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுதபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 18.09.2017ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். கேள்வியாளர் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு உறைகளில சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணைபொறுப்பு (Bid Security) 18.11.2017ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.
8. VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் (Bid) உடன் இணைக்கவும் இணைக்காத பட்சம் VAT கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக்காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|
| MU/DAD/Tender/2017/39-07 | விளாத்திகுளம் | 5.03Mn | 18/11/2017 | C8 அல்லது அதற்கு மேல் | 51,000.00 | துணுக்காய் |
| | இடைக்கட்டுக்குளம் | 4.33Mn | | | 44,000.00 | ஒட்டுசுட்டான் |

உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
முல்லைத்தீவு.

(C-9373)



## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
### இறைச்சிக்கடைகளுக்கான 21.09.2017 - 31.12.2017 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக்

# கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் இறைச்சிக் கடைகளினை 21/09/2017 - 31/12/2017 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 21/09/2017 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை 08/09/2017 தொடக்கம் 21/09/2017 முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த ஏலத் தொகை (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 5000.00 | 198700.00 | 100.00 |
| 02 | நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 16200.00 | 100.00 |
| 03. | கோயிற்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1000.00 | 65300.00 | 100.00 |
| 04 | உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 6000.00 | 142800.00 | 100.00 |
| 05. | உடுப்பிட்டி கோழிக்கடை | 500.00 | 66700.00 | 100.00 |
| 06. | சாண்டா சந்தை கோழிக்கடை | 500.00 | 18200.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 2017/09/21ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணம், VAT, NBT ஆகியவற்றைச் செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

அ. வினோராஜ்
செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
08/09/2017.

(C-9571)

## கடமை நிறைவேற்று...

தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலக கட்டடத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி பிரேரணை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் கடமை நிறைவேற்று அதிபர்கள் கடமையாற்றி வரும் நிலையில், வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை கடமையாற்றிய கடமை நிறைவேற்று அதிபர்களை தரம்III அதிபர் தரத்தில் நிரந்தரமாக உள்வாங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு கல்வி அமைச்சரை இந்தச் சபை கோருகின்றது. மேலும் இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரையும் இந்தச் சபை கோருகின்றது.

மிகை அதிபர்களாக வட மாகாணத்தில் கடமையாற்றும் அனைவருக்கும் அதிபர் தரம் IIIஇல் உள்ள ஏனையவர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளை வழங்க நடவடிக்கை எடுத்து உரிய அனுமதியை கொழும்பு கல்வி அமைச்சரிடம் இருந்து பெற்று உரிய தீர்வை வழங்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் இந்தச் சபை கோருகின்றதென தனது பிரேரணையை உறுப்பினர் சிவாஜிலிங்கம் முன்மொழிந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்,

நாடளாவிய ரீதியில் கடமை நிறைவேற்று அதிபர்கள் பதவியிலிருந்து வருகின்றனர். ஆனால் வடக்கு மாகாணத்தில் தான் புதிய நடைமுறை உள்ளது. வெறுமனே கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நியமனம் வழங்குமாறு பிரேரணை நிறைவேற்றினால் ஒன்றும் நடக்க போவதில்லை. மத்திய கல்வி அமைச்சரோடு இது தொடர்பில் பேசி உரிய தீர்வை குறுகிய காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனையவற்றை போல் காலம் தாமதிக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் அரியராட்ணம்,

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வடக்கு மாகாண சபையில் முதலில் முன்வைத்தவன் நான். இந்த யோசனை முன்வைக்கப்பட்ட போது கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் மற்றும் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற்ற அதிபர் சங்கத்தினர் வடக்கு மாகாண முதலமைச்சரை சந்தித்திருந்தனர். அதன் பின்னர் இந்த விடயங்கள் இன்று வரை தீர்க்கப்படாத பிரச்சினையாக தொடர்கின்றது. எனவே இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதன் போது எதிர்க்கட்சி தலைவர் தவராசா கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தின் கல்வி தரம் உயர வேண்டும் என்றால், தரமான அதிபர்கள் அவசியம். எனவே கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு மூன்று வருடம் தற்காலிக நியமனம் வழங்கிவிட்டு அந்த காலப்பகுதியில் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற்றால் நிரந்தர நியமனம் வழங்குவது என்ற சிபார்சினை முன்வைக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,

எதிர்க்கட்சி தலைவர் தவராசாவின் கருத்தை மறுதலித்து பேசினார். மேலும் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் எவ்வாறு வடக்கில் உள்ள பாடசாலைகளை கொண்டு நடத்துவது? 20 வருடங்களாக வடக்கில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளை நடத்தியவர்கள் கடமை நிறைவேற்று அதிபர்கள் தான். ஆகவே அவர்கள் தகுதியற்றவர்கள் என்று யாரும் கூற முடியாது. எனவே இந்த விடயத்தில் மத்திய அரசை நம்பியிருக்காது வடக்கு மாகாண சபையே ஒரு பரீட்சையை நடத்தி அதன் ஊடாக கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தர நியமனத்தில் உள்வாங்க முடியும் என அவர் கூறினார்.

மீண்டும் பேசிய உறுப்பினர் சிவாஜிலிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபை சில நிபந்தனைகளை முன்வைத்து கடமை நிறைவேற்று அதிபர்களை உள்வாங்க முடியும். குறிப்பாக நிரந்தர நியமனம் வழங்கப்படுவோர் குறைந்தது மூன்று வருடங்கள் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றி இருக்க வேண்டும் எனவும், நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்ற அதிபர்கள் மூன்று வருடங்களுக்குள் பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்று ஆலோசனைகளை முன்வைக்கலாம் என்றார்.

தொடர்ந்து பேசிய மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கருத்து தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் எமது மாகாணத்தில் கல்வி நிலையை பின்தங்க விடாமல் கடமை நிறைவேற்று அதிபர்கள் வைத்திருந்தார்கள். மிகவும் கஷ்ட பிரதேசங்களிலும் பணியாற்றியிருந்தார்கள். எனவே அவர்களின் சேவைக்காக நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். தற்போது உள்ள கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நியமனம் வழங்கிவிட்டால் இனிவரும் காலங்களில் கடமை நிறைவேற்று அதிபர்கள் என்ற வகையினர் இருக்க மாட்டார்கள். எனவே நிரந்தர நியமனம் நல்ல தீர்வு என அவர் தெரிவித்தார்.

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் அதேவேளை, அவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரையில் தற்காலிகமாக அவர்கள் பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டும். குறிப்பாக பரீட்சையில் சித்தி பெற்ற அதிபர்கள் தீவக வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு நியமிக்கப்பட்ட 16 அதிபர்களில் 2 அதிபர்களே பொறுப்பெடுத்துள்ளனர். ஏனைய 14 அதிபர்களும் தங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் உப அதிபர்களாக பொறுப்பேற்று கடமையாற்றி வருகின்றனர். இந்த நிலையில் தான் இந்த அதிபர் பிரச்சினை தொடர்கின்றது என சுட்டிக்காட்டினார்.

இந்த கருத்துக்களை பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரனும் உறுப்பினர் கஜதீபனும் ஆதரித்து பேசினார். இதன் பின்னர் உறுப்பினர்களான அரியரட்ணம், கஜதீபன் மற்றும் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் ஆகியோரை உள்ளடக்கி குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்த குழுவின் ஊடாக கடமை நிறைவேற்று அதிபர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் ஆராய்வது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் இன்றைய (நேற்றைய) அமர்வில் உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கடமை நிறைவேற்று அதிபர்களின் நியமனத்தின் போது கவனத்தில் எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டு உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் பிரேரணை எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (மு-4)

## வலம்புரியை பார்த்தே...

கட்சி தலைவர் மீது குற்றச்சாட்டுக்கள் பல சுமத்தப்பட்டிருந்தன. அதில் எதிர்க்கட்சி தலைவர், பத்திரிகைகளுக்காக பேசுபவர் என்பன உட்பட பல விடயங்களை முதலமைச்சர் முன்வைத்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் நேற்றைய அமர்வில் தனக்கு கூடிய நேரம் தேவை என தவராசா கோரினார்.

அதற்கு குறைந்த நேரமே தர முடியும் எனவும் பத்து நிமிடங்களுக்குள் எல்லாவற்றையும் பேசி முடிக்குமாறும் அவைத் தலைவர் கூறினார். எனினும் அவைத்தலைவரோடு முரண்பட்ட தவராசா, தனக்கு கூடிய நேரம் தர வேண்டும் என அடம்பிடித்தார். இதன்போது உங்களுக்கு நேரம் தந்தால், எதிர்க்கட்சி தலைவர் பேசுவதற்கு மாத்திரம் அதிக நேரம் வழங்குவதாக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டுவதாக அவைத் தலைவர் கூறினார்.

இதனால் சீற்றமடைந்த எதிர்க்கட்சி தலைவர் தவராசா, எல்லோரும் வலம்புரி பத்திரிகையில் எழுதுபவற்றை பார்த்துவிட்டு பேசுகின்றனர். அதனை நீங்கள் பொருட்படுத்தாதீர்கள் என்றார்.

எனினும் எதிர்க்கட்சி தலைவரின் இந்த குற்றச்சாட்டிற்கு சபையில் இருந்த எந்த உறுப்பினர்களும் ஆதரவு தெரிவிக்கவில்லை. மாறாக எதிர்க்கட்சி தலைவரை பார்த்து நகைத்து கொண்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது. (மு-4)

## 500 கிலோ கிபிர்...

மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வயதானோர்களை வாகனங்களிலும் பொலிஸார் ஏற்றி அக் கிராமத்தை விட்டு அப்புறப்படுத்தி உள்ளனர்

பின்னர் நேற்று மாலை இந்திராபுரம் பகுதிக்கு வருகை தந்த விமானப் படையினர் குறித்த கிபிர்க் குண்டினை சுமார் பத்து அடி குழி ஒன்றினைத் தோண்டி அதனுள் வீழ்த்தியே மாலை நான்குமணி ஒரு நிமிடத்திற்கு செயலிழக்க செய்துள்ளனர்

செயலிழக்கச் செய்யும் பொழுது யாழ் கண்டி வீதியின் போக்குவரத்து முகமாலைப் பகுதியிலும் பளைப் பகுதியிலும் நிறுத்தப்பட்டே செயலிழக்க வைக்கும் பணி இடம்பெற்றுள்ளது

இதன்போது அதனை அண்டிய பகுதிகளில பாரிய சத்தத்துடனும் அதிர்வுடனும் குண்டு வெடித்ததாக அயலில் உள்ள கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்

இதன் செயலிழப்பு பணி தொடர்பாக பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்திற்கு விமானப்படையினர் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடத்தக்கது. (மு-312)

## வயோதிப தம்பதியின்...

பணம் மற்றும் நகையை கொள்ளையடித்து சென்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை சுமார் 12.30 மணியளவில் இளவாலை சிறுவிளான பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நகையும் 11 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

நாய் குலைக்கும் சத்தம் கேட்டு வயோதிப தம்பதியினர் வெளியே வந்து பார்த்துள்ளனர்.

இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி திருடர்கள் வயோதிப தம்பதியினரை தாக்கி விட்டு குறித்த திருட்டினை நிகழ்த்தியுள்ளனர்.

இதில் குறித்த வீட்டு பெண்மணி காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த திருட்டினை நிகழ்த்திய இளைஞர்கள் 20 வயது மதிக்கத் தக்கவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-104)

## நல்லூர் தந்த...

மொத்தமாக ரூபா 68 இலட்சத்து 37 ஆயிரத்து 717.63 செலவு செய்யப்பட்டுள்ளது. செலவிலும் கூடிய வருமானமாக ரூபா ஒரு கோடி 37இலட்சத்து 43ஆயிரத்து 163ரூபாய் 31 சதமாகவும் காணப்படுகின்றது. நல்லூர் உற்சவத்தின் போது வெளிவீதி கண்காணிப்பிற்காக 13 இலட்சத்து 60 ஆயிரத்து 92 ரூபாவுக்கு சீ.சீ.ரி.வி கமரா கொள்வனவு செய்யப்பட்டது எனவும் சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது வருமானமானது இந்த வருடம் ரூபா.1, 290, 205.41ஆல் அதிகரித்து காணப்படுகிறது. இது சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது 6.7% அதிகரிப்பாகும். செலவானது ரூபா.719.599.15 ஆல் குறைவடைந்துள்ளது. சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது செலவினமானது 9.5%ஆல் குறைவடைந்துள்ளது. செலவிலும் கூடிய வருமானமானது நகர அபிவிருத்திக்கும், இதர சேவை வழங்கலுக்கும் பயன்படுத்தப்படும்.

நல்லூர் உற்சவத்தின் போது சகல கடைகளும் பத்திரிகை வாயிலாக கேள்வி கோரியே வழங்கப்பட்டது. சகல கடைகளுக்குமான குறைந்த பட்ச கேள்வித் தொகை சென்ற வருடத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையே இவ் ஆண்டிற்கும் அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டது. குறிப்பாக கச்சான் கடை மற்றும இனிப்புக் கடைகளிற்கு இவ்வாண்டு எவ்வித அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் கேள்விதாரர்களிடையேயான போட்டி காரணமாக கேள்விதாரர்களால் கூடிய கேள்வித் தொகையே குறிப்பிடப்பட்டமையினால் உயர்ந்த தொகை குறிப்பிட்ட கேள்வி தாரருக்கு வழங்கப்பட்டன என யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார். (செ)

## லலித், அனுஷவுக்கு...

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான, 600 மில்லியன் ரூபாவை தவறான முறையில் கையாண்டு, தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்தே, இவர்களுக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லலித் வீரதுங்கவும், அனுஷ பல்பிட்டவும் குற்றவாளிகளாக காணப்பட்டதை அடுத்து, 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையுடன், தலா 2 மில்லியன் ரூபா அபராதத்தையும் நீதிமன்றம் விதித்துள்ளது,

அத்துடன் இரண்டு பேரும் தலா 50 மில்லியன் ரூபாவை, தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (மு-11)

## பொலிஸார் மீது...

அடையாள அணி வகுப்புக்குட்படுத்திய போது அதில் 9 பேர் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 14 சந்தேக நபர்கள் நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அத்துடன் வாள்வெட்டு சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் இருவரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். அப்போது நீதவான் முன்னிலையில் இரு பிரிவுகளாக குறித்த 14 சந்தேகநபர்களும் அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். முதல் பிரிவில் 4 சந்தேகநபர்களும் இரண்டாவது பிரிவில் 5 சந்தேக நபர்களும் அடையாளம் காட்டப்பட்டனர்.

அதனை தொடர்ந்து, மேற்குறித்த சந்தேக நபர்கள் தொடர்பாக பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அறிக்கை ஒன்று பெறப்படவுள்ளதாக மன்றில் விண்ணப்பம் செய்தனர். அந்த விண்ணப்பத்தினை அடுத்து குறித்த சந்தேக நபர்கள் 14 பேரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொக்குவில் நந்தாவில் பகுதியில் கடந்த யூலை மாதம் 30ஆம் திகதி 10இற்கும் மேற்பட்ட இளைஞர்களால் கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை விசாரணைகளின் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தேடுதல் மேற்கொண்டு தொடர்ச்சியாக சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நேற்றைய தினம் சந்தேக நபர்களை அடையாளம் காண்பிப்பதற்காக மேற்குறித்த சம்பவத்தில் காயமடைந்த இரு பொலிஸாரில் ஒருவர் இதுவரை பூரண குணமடையாத காரணத்தினால் அவர் இருசக்கர நாற்காலியிலேயே நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். (மு-9)

## மேன்முறையீடு செய்வோம்...

தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் 600 மில்லியன் ரூபா செலவில் பிக்கு உடை மற்றும் விகாரைகளுக்கு வழங்கு வெள்ளை ஆடை கொள்வனவு மோசடியில் ஈடுபட்டிருந்தமை தொடர்பான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றத்தின் அடிப்படையிலேயே இருவருக்கும் தலா மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக இருவருக்கும் தலா 2 மில்லியன் ரூபா அபராதமும், 50 மில்லியன் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த நட்டஈட்டை செலுத்தத் தவறினால், மேலும் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், குறித்த தண்டனைத் தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்யப்படும் என மகிந்த ராஜபக்ஷ கேகாலையில் நடந்த மக்கள் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். (மு-11)

## உடனடி வேலை வாய்ப்பு
## V2 TRAVELS

UK-550/=Kg

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?.
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்)
நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்கின்றோம்.
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) **0768226241**



அண்ணா
## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services (C-9472)

**அண்ணா பொதிகள் சேவை**
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை



## A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு

**SPOKEN ENGLISH**
Mr.T.சதீஸ்
ஆரம்பம் :
09.09.2017
சனி 3.00pm

பிரிவு II (433)

NAC மானிப்பாய் (0776947162)



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு குலுக்கல் முறையில் மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9464)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



# TECHNO WORLD
## A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2017 இல் செயல்முறைப் பரீட்சைக்கு (Practical Exam) தோற்றும் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான விசேட தொடர்ச்சியான செயலமர்வு.

### பொறியியல் தொழில்நுட்பம் (E-TEC)

**ஆரம்பம் 09.09.2017 காலை 9.00 மணி**
**(வெலிங்டன் சந்தி, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)**

| | |
|---|---|
| பிரபல ஆசிரியர் ஜெகநாதன் | இயந்திரவியல் (Auto mobile) |
| சேரலாதன் (தொழில்நுட்ப பீடம்) | உற்பத்தி தொழில்நுட்பம் |
| அருண்குமார் (J/MHC) | குடிசார் தொழில்நுட்பம் |
| பானுஜன் (விரிவுரையாளர் தொழில்நுட்ப பீடம்) | நில அளவை |
| நிறோஜன் (பொறியியல் பீடம்) | நில அளவை |
| நிருபன் (தொழில்நுட்ப பீடம்) | நில அளவை |
| பிரஷாந்தன் (தொழில்நுட்பபீடம்) | Electrical & Electronics |
| புவிராஜ் (தொழில்நுட்ப பீடம்) | Electrical & Electronics |

### உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (BIO-TEC)

திருக்குமரன் (J/NCC)
கலைதீபன் (J/NCC)
சசிகரன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
சாரங்கன் (K/KCC)
வினோத் (J/CHC)
விஷ்ணு (யா/ சிதம்பராக் கல்லூரி)
துர்க்காதீபன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

### குறிப்பு

- யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் விசேட கருத்தரங்கு இடம்பெறும்.
- அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முதலிடம் பெற்ற மாணவர்களின் கருத்தரங்கு இடம்பெறும்.
- 2017 பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் (விடைகளுடன்)
- கடந்த 2015, 2016 செயல்முறை வினாக்கள் விடைகளுடன் தரப்படும்.

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

(C-9572) **077 017 5346**


குண்டு...

முகாமில் கைக்குண்டொன்று வெடித்ததில் 4 படையினர் காயமடைந்துள்ளனர்.

வெடிப்பு இடம்பெற்ற விமானப்படை முகாமில் இராணுவ வீரர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்ட போது. இராணுவ வீரரொருவர். கைக்குண்டை வீசும் முறை தொடர்பான பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே. இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.(மு-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# உயர்கலைக் கல்லூரி
## A9 வீதி, மீசாலை

**2017 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய**
✦ பொறியியல் தொழில்நுட்பம்
✦ உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்துறை


மாணவர்களுக்கான செயன்முறைப் பயிற்சிகள், நிலையறி பரீட்சை (Spot test - 90க்கு மேற்பட்டது) ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனியாக பயிற்சிகள் வழங்கப்படும். இறுதிப் பரீட்சையில் 25 புள்ளிகளை பெறுவதற்கு உத்தரவாதம் தருகின்றோம்.

✦ 5 மாதம் கொண்ட சிங்களம், ஆங்கிலம்
✦ O/L பரீட்சைக்கான துரித மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்
✦ B.A இரண்டாம் வருடம் (பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி)

வகுப்புக்கள் யாவும் ஆரம்பம்.
காலம் - 09.09.2017 நேரம் - காலை 10.00 மணி
(முற்பதிவுகளை பெற்றுக் கொள்ளலாம்)

தொ.பே : 076 466 4021 (403) -நிர்வாகி


# நெஞ்சம் நெகிழ்ந்த 8-ம் ஆண்டு நினைவலைகள்...



## சண்முகநாதன் சந்துதன்

**அருள்நங்கை சண்முகநாதனின்**
**செல்வத்திருமகன் தெய்வமணம் கமழும்**
**சந்துதன் அவர்கள்**

வெறுமையில் தெளிவாய் வெற்றிடத்தில் பூரணமாய்
அருவத்தில் உருவாய் எங்கள் அன்புச் சந்துதன்
நிம்மதியின் அமைதியாய் இந்நிலத்தில் எங்கும் நிறைந்து
நித்தமாய் என்றும் நீ நிலைத்து இருப்பாயே சந்துதன்
ஆசைக் கனவுகள் கலைந்தன பாதைகள் எல்லாம் வழிமாறின
உருவங்கள் எல்லாம் உன் விலாசங்கள் மறக்க
முடியவில்லையே சந்துதனே....!!

இங்ஙனம்
**சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் - புவனேஸ்வரியம்மா**
(நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் ஆதீனகர்த்தா),

**சிவஸ்ரீ. சுந்தரலிங்கக் குருக்கள் பிரபாலினி குடும்பத்தினர்**
(தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்),

**சிவஸ்ரீ. திருஞானசுந்தர. திருஞானசம்பந்தக் குருக்கள் ஜீவிதா குடும்பத்தினர்**
(முல்லைத்தீவு கற்பக விநாயகர் தேவஸ்தானம், குமுழமுனை),

**சிவஸ்ரீ. சண்முகரெட்ணக் குருக்கள் பிரசன்னன் குருக்கள் சங்கீர்த்தனி குடும்பத்தினர்**
(திருக்கோணேஸ்வரர் தேவஸ்தானம் பிரதம குரு, திருகோணமலை.)

(சி-9575)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.